Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency post Office
303, K.K.S. ROAD JAFFNA T.P. 021 - 22 2670
FAX - 222 3214 email-del-smskr @ evreka.lk
(சு/1422)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 புரட்டாதி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ரஜப் 21 (19.09.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 349

# விடுதலைப் புலிகளின் தீர்வு யோசனை அடுத்த மாத நடுப்பகுதியில் கையளிப்பு



ஹெல்கிசனுடன் தமிழ்ச்செல்வன்

## தமிழ்ச்செல்வன் நேற்று அறிவிப்பு

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை தொடர்பான விடுதலைப் புலிகளின் பதில் யோசனைகள் அடுத்த மாதம் நடுப்பகுதிக்கு முன்னதாக நோர்வே பிரதிநிதிகள் ஊடாக இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்படும் என்று, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் - நோர்வேயின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து ஊடகவியலாளர்களுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நோக்குடன் - இலங்கை வந்துள்ள நோர்வே வெளிவிகார அமைச்சர் விதார் ஹெல்கிசனும், சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மும் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தினர்.

கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் நேற்றுக்காலை 10.30 மணியளவில் ஆரம்பமான இப்பேச்சுக்கள், சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்றன.

இடைக்கால நிர்வாகசபை யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும், இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறல்கள் மற்றும் வடக்கு - கிழக்கு மக்களின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிக்கொடி ஏற்றும் விவகாரம் அம்பாறையிலும் முறுகல்!

(மட்டக்களப்பு)

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் புலிக்கொடி ஏற்றக்கூடாதெனக்கோரி நேற்றுக் காலை அம்பாறை - அக்கரைப்பற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் கண்காணிப்புக்குழுவின் அக்க ரைப்பற்று பிரதிநிதி அருகாஸ் தாவிற்கும், விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் குயிலின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இருபோக்குவரத்துப் பொலிஸார் குச்சவெளி பகுதியில் கடத்தல்!

(திருகோணமமலை)

திருகோணமலை நகரில் இருந்து 13 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள குச்சவெளி பகுதியில் வைத்து போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரி

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இரகசியம் பேணவேண்டிய விடயங்களில் அரசியல் இலாபத்தைத் தேடவேண்டாம்!

## பிரதமர் ரணில் சந்திரிகாவுக்குக் கடிதம்!

(கொழும்பு)

**இரகசியமாக பாதுகாக்கப்படவேண்டிய படையினர் சம்பந்தமான விடயங்களை சுய அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளுக்காக வெளிப்படையாக பயன்படுத்துவதனைத் தவிர்ப்பது நல்லதென கருதுகிறேன்.**

**இவ்வாறு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதத்திற்கான பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

ஏ - 9 பாதை வழியே நடைபெற்ற ஜெயசிக்குறு நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய பகுதிகள் எல்லாம் இழக்கப்பட்டது உங்கள் காலத்தில். கடந்த இருபது ஆண்டுகளாக எமது ஆட்சிக்காலத்தில் என்றுமே வெற்றிகொள்ள முடியாதிருந்த ஆனையிறவுப் படைத்தளம் உங்கள் காலத்திலேயே இழக்கப்பட்டது. கட்டுநாயக்கா தளத்தில் ஏறபட்ட அனர்த்தத்தில் வான் படையின் பலம் சிதைக்கப்பட்டதும் உங்கள் காலத்திலேயாகும். 1995 ஆம் ஆண்டு திருமலை துறைமுகத்துக்கு முன்னுள்ள சம்பூர் பகுதியிலிருந்த படையினரின் முகாமை அகற்றியிருந்தீர்கள். இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய தூதுவர் கிளிநொச்சிக்கு வருகிறார்

(கொழும்பு)

தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்திப்பதற்காக - இலங்கைக்கான கனேடியத் தூதுவர் இன்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்யவுள்ளார்.

அங்கு விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொங்குதமிழ் நிகழ்வில்பங்குபற்ற யாழ்.பல்கலை மாணவர் குழு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுக்கு நேற்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று வவுனியா புறப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே அங்கு சென்றுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் அங்குள்ள பாடசாலை மாணவர்களையும், மக்களையும் சந்தித்துக் கலந்துரையா

(10 ஆம் பக்கம் பார்க்க)

அம்பாறை மாவட்ட அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் குயிலின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## இருபோக்குவரத்துப் பொலிஸார் குச்சவெளி பகுதியில் கடத்தல்!

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் இருந்து 13 கிலோமீற்றருக்கு அப்பாலுள்ள குச்சவெளி பகுதியில் வைத்து போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டனர்.

இவர்கள் பயணம் செய்த மோட்டார் சைக்கிளும் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரி (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் ரணில் சந்திரிகாவுக்குக் கடிதம்!

(கொழும்பு)

**இரகசியமாக பாதுகாக்கப்படவேண்டிய படையினர் சம்பந்தமான விடயங்களை சுய அரசியல் இலாபம் தேடும் முயற்சிகளுக்காக வெளிப்படையாக பயன்படுத்துவதனைத் தவிர்ப்பது நல்லதென கருதுகிறேன்.**

**இவ்வாறு - பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி சந்திரிகாவின் கடிதத்திற்கான பதில் கடிதத்தில் தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்,**

ஏ - 9 பாதை வழியே நடைபெற்ற ஜெயசிக்குறு நடவடிக்கை மூலம் படையினர் கைப்பற்றிய பகுதிகள் எல்லாம் இழக்கப்பட்டது உங்கள் காலத்தில். கடந்த இருபது ஆண்டுகளாக எமது ஆட்சிக்காலத்தில் என்றுமே வெற்றிகொள்ள முடியாதிருந்த ஆனையிறவுப் படைத்தளம் உங்கள் காலத்திலேயே இழக்கப்பட்டது. கட்டுநாயக்கா தளத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தில் வான் படையின் பலம் சிதைக்கப்பட்டதும் உங்கள் காலத்திலேயாகும். 1995 ஆம் ஆண்டு திருமலை துறைமுகத்துக்கு முன்னுள்ள சம்பூர் பகுதியிலிருந்த படையினரின் முகாமை அகற்றியிருந்தீர்கள். இந்தக் காலப்பகுதியில் விடுதலைப் புலி (10 ஆம் பக்கம் பார்க்க)

துரையாடுவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## பொங்குதமிழ் நிகழ்வில்பங்குபற்ற யாழ்.பல்கலை மாணவர் குழு

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வுக்கு நேற்று யாழ்பல்கலைக்கழக மாணவர் குழுவொன்று வவுனியா புறப்பட்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே அங்கு சென்றுள்ள பல்கலைக்கழக மாணவர்கள், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை உறுப்பினர்கள் அங்குள்ள பாடசாலை மாணவர்களையும், மக்களையும் சந்தித்துக் கலந்துரையா (10 ஆம் பக்கம் பார்க்க)

# பிரதமர் அனுப்பிய கடிதத்தில் எந்த உண்மையும் இல்லை!

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுப்பிவைத்த கடிதத்தில் எந்தவித உண்மையும் இல்லையென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்றிரவு ஜனாதிபதி செயலகம் அறிக்கையொன்றினை வெளியிட்டது.

அந்த அறிக்கையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றுள்ள சில சம்பவங்களை கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

மேற்படி கடிதத்தில் குறிப்பிடப்பட்ட சம்பவங்களால் எந்தவித உண்மையும் இல்லையெனவும், இந்த விடயம் தொடர்பாகத் தாம் கவனத்தில் எடுத்துள்ளதாகவும், அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (01)

# யாழ். உயர் பாதுகாப்பு வலயங்களை இப்போதைக்கு அகற்ற முடியாதாம்!

## சரத்பொன்சேகா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக் குடியமர்த்தல் மற்றும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துவது தொடர்பாக நேற்று பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற மாநாட்டில் - யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, தற்போதைய இராணுவ நிலைகளில் எந்த மாற்றங்களையும் ஏற்படுத்த முடியாது எனத் தெரிவித்ததையடுத்து, முடிவு எதுவும் எட்டப்படாது மாநாடு முடிவடைந்தது.

யாழ். குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயம் அமைந்துள்ள பகுதிகளில் மக்களை மீளக்குடியமர்த்தல் மற்றும் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக, இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் - பாதுகாப்பு அமைச்சர் திலக் (10 ஆம் பக்கம் பார்க்க)

# தாய்லாந்தின் கண்ணிவெடி நிபுணர்கள் கிளிநொச்சியில் கௌரவிக்கப்பட்டனர்!



(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் இயங்கும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் புதிய அணியினருக்கு விசேட பயிற்சிகளை வழங்கவென தாய்லாந்து கண்ணிவெடி செயற்பாட்டு நிலையத்திலிருந்து வருகை தந்திருந்த பத்து நிபுணர்களுக்கு அவர்களின் பணியைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று மாலை நடைபெற்றது.

மனிதநேய கண்ணிவெடி (10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவிற்கு சுகவீனமாம்; ஹெல்கிசன் சந்திப்பு ரத்து!

(கொழும்பு)

நோர்வே சமாதானத் தூதுக்குழு மற்றும் பிரதமருடன் நேற்று மாலை நடைபெறவிருந்த சந்திப்புக்கள் ஜனாதிபதியின் சுகவீனம் காரணமாக இடைநிறுத்தப்பட்டதாக, ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

எனினும் - இவர்களுடன் (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்

# அபிவிருத்திப் பணிகள் குறித்து ஹெல்கிசன் நேரில் கேட்டறிந்தார்!

வன்னிக்குச் சிறப்பு விஜயம் மேற்கொண்ட நோர்வே துணை வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் நோர்வே விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் அடங்கிய குழுவினர் நேற்றுப் பிற்பகல் தமிழர் புனர்வாழ்வுக் கழக முதன்மை பணியகத்திற்கு விஜயம்செய்து, தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி அடங்கிய குழுவினரைச் சந்தித்து, தமிழர் புனர்வாழ்வு கழகத்தின் மனிதாபிமான புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் - தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகள் தொடர்பாகத் (10 ஆம் பக்கம் பார்க்க)

# பனை சார்ந்த உற்பத்தித் துறைகளில் நவீன தொழில்நுட்பம் அறிமுகமாகும்!

## பனை அபிவிருத்தி சங்கத்தலைவர் சிவபாதம்

(யாழ்ப்பாணம்)

குறுகிய அரசியல் நோக்கங்களை விடுத்து, அனைவரும் பனை அபிவிருத்திச்சபையினுடைய வளர்ச்சிக்கும், அது சார்ந்த சமூகத்தினுடைய வளர்ச்சிக்கும் பாடுபடவேண்டும் எனத் தெரிவித்தார் பனை அபிவிருத்திச்சபை தலைவர் பொ.சிவபாதம்.

பனை அபிவிருத்திச்சபை காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆரம்பத்திலே எமது சபை உருவாக்கப்பட்டபோது, நிதி நெருக்கடிகளிற்கு முகம் கொடுக்கவேண்டிய தேவை இல்லாமல் இருந்தது. அன்றைய அரசு வெளிநாட்டு இறக்குமதிகளை தடைசெய்து உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு முன்னுரிமை வழங்கியமையினாலேயே, அவ்வாறனதொரு நிலை இருந்தது. இன்று அவ்வாறு இல்லை.

பனை அபிவிருத்திச்பை இன்று தனது 25 ஆண்டு சேவையைப் பூர்த்தி செய்துள்ளது. ஆனால் அது எதற்காக உருவாக்கப்பட்டதோ - அந்த நோக்கத்தை அடைந்ததா என்பது கேள்விக்குறியாகவே உள்ளது. நோக்கங்களை அடைய முடியாமைக்கு, பிரதான காரணமாக இருந்தது, எமது சபை எதிர்நோக்கிய நிதி நெருக்கடிகளே.

காலத்திற்குக் காலம் நாட்டில் ஏற்பட்ட பல அரசியல் மாற்றங்களும் எமது சபையை பாதித்தது. பலர் தமது சுயலாப அரசியலுக்காக சபையை பயன்படுத்தினார்கள். இதனால், மக்களே பெரிதும் பாதிப்பிற்குள்ளானார்கள்.

இன்றும் கூட - தனிப்பட்ட விரோதங்களையும், வேறுபாடுகளையும் வைத்துக்கொண்டு - அதனை சபையின் மீது காட்ட பலர் முயற்சிப்பது வேதனையான விடயம். எமது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே, பனை அபிவிருத்திச் சபையினுடைய வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பை நல்கவேண்டும்.

அரசு இன்று இரண்டாம் தாய் மனப்பாங்குடனேயே செயற்படுகிறது. அவ்வாறானதொரு சூழல் எதிர்காலத்தில் தமிழ்மக்களுடைய பெரும் சொத்தாகிய பனை அபிவிருத்திச் சபையை இழக்கவேண்டிய நிலைக்கு காரணமாகிவிடும். நாம் அதற்கு இடமளிக்கக்கூடாது.

குறிக்கப்பட்ட சமூத்தினுடைய பொருளாதார, சமூக வளர்ச்சிக்காக உருவாக்கப்பட்டது அல்ல. பனை அபிவிருத்திசபை - ஒட்டுமொத்த தமிழ்சமுதாயத்தினுடைய பொருளாதாரத்தை இலக்காகக்கொண்டே உருவாக்கப்பட்டது. அதனை இன்று பலர் மறந்துவிட்டோம்.

இந்த துறையில் நாம் பல அறிவியல் நுட்பங்களைப் புகுத்தவுள்ளோம். இது தொடர்பான அராய்ச்சியிலும் ஈடுபட்டு வருகிறோம். பனையில் ஏறுவதற்கான இயந்திரம் ஒன்றை, இந்தியாவில் இருந்து கொண்டுவரவுள்ளோம். அதற்கு பின், ஒரு சமூகத்தினுடைய துறை இது எனும் நிலை பெரும்பாலும் மாற்றமடையும் என எதிர்பார்க்கிறோம்.

இன்று எமது உற்பத்திகளை ஜப்பான் போன்ற உயர்தொழில்நுட்ப வல்லரசுகளுக்குக்கூட அனுப்பக் கூடிய நிலை உருவாகியுள்ளது. இது எமக்குக் கிடைத்தவொரு வெற்றி எனவும் தெரிவித்தார்.

அதேவேளை, பனை அபிவிருத்திச்சபையின் 25 ஆண்டு நிறைவை யொட்டி - பாடசாலை மாணவர்களுக்கிடையே - கட்டுரை போட்டிகள் பனைவளத்துறை சம்பந்தப்பட்ட பயிற்சியாளர்களிடையே - கைப்பணிபபொருள் போட்டிகள், கண்காட்சி நிகழ்வுகள், ஊழியர் கௌரவிப்பு என்பனவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

. திக்கம் வடிசாலை தொடர்பாக, செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு - அது தொடர்ந்தும் பனை அபிவிருத்திச் சபையின் கீழேயே உள்ளது எனவும் தலைவர் சிவபாதம் தெரிவித்தார்.

(ச)

# பல்கலைக்கழக அனுமதி படிவங்கள் யாழ்ப்பாணத்தில் முடிந்துவிட்டன!

(யாழ்ப்பாணம்)

பல்கலைக்கழக அனுமதிகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் யாழ்ப்பாணத்தில் முடிவடைந்துவிட்டன. இதனால், பல மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிறுவனம் ஒன்றினூடாகவே, விண்ணப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வந்தன. தற்போது விண்ணப்பப்படிவங்கள் முடிவடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய இறுதித்திகதி - இம்மாதம் 30 ஆம் திகதி ஆகும். ஆனால், எதிர்வரும் 26 ஆம் திகதியில் மீண்டும் புதிய விண்ணப்பபடிவங்கள் கிடைக்குமென அறிவிக்கப்பட்டுள்து. 27ஆம் 28 ஆம் திகதிகள் விடுமுறை தினங்களாக உள்ளமையால், விண்ணப்பப் படிவங்களை அனுப்புவதில், மாணவர்கள் சிக்கல் நிலையை எதிர்நோக்குவதாக, தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக, உரிய நடவடிக்கை விரைவாக எடுக்கப்பட வேண்டுமெனவும், இல்லாவிடில் பல மாணவர்கள் பாதிப்பிற்குள்ளாக நேரிடும் எனவும், கவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது - போக்குவரத்து சேவைகள் சீராக இருந்தும், விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கத் தாமதமாவது குறித்து, மாணவர்கள் தமது விசனத்தைத் தெரிவித்துள்ளனர்.

# இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகளை ஆரம்பிக்குமாறு விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை!

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களுக்கு, இடை நிறுத்தப்பட்ட பரீட்சைகளை மீள ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, பல்கலைக்கழக நிர்வாகத்திடம்- விஞ்ஞானபீட மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக, யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ். பல்கலைக்கழகத்தில் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துடன் - மாணவர்களின் பரீட்சைகள், விரிவுரைகள் இடைநிறுத்தப்பட்டது. வேலைநிறுத்தம் முடிவுக்கு வந்த பின்னர், கடந்த 8 ஆம் திகதி ஏனைய பீட மாணவர்களின் கல்விச்செயற்பாடுகள் ஆரம்பமாகிவிட்டன.

இருந்தபோதிலும், விஞ்ஞானபீட மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் இன்னும் ஆரம்பமாகவில்லை. இந்த விடயம் - விஞ்ஞானபீட மாணவர்களை மன உளைச்சலுக்கு உள்ளாக்குவதுடன், கடும் விசனமடைய வைத்துள்ளது.

விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம் சில கோரிக்கைகளை முன்வைத்து, இன்னும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளில் இதுவரை ஈடுபடாது இடைநிறுத்தியுள்ளதாக அறிகிறோம். எனினும், உத்தியோகபூர்வமாக மாணவர்களுக்கு அறியத்தரவில்லை.

மாணவர்களைப் பொறுத்தவரை விஞ்ஞான பீட ஆசிரியர் சங்கம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவை.

கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்திற்கு முதல் - கல்விசாரா ஊழியர் சங்கத் தலைவர் மாணவர் ஒன்றியத்திடம், தமது போராட்டத்தினால் மாணவர்களின் பரீட்சைகள் தடைப்படாதிருக்கும் என உறுதியளித்தார். ஆனால், உறுதியளித்ததற்கு மாறாக, மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் இருந்தபோது பரீட்சை விடைத்தாள்கள், வினாத்தாள்கள் பரீட்சைக் கிளையினுள் வைத்துப் பூட்டப்பட்டது. இது மாணவர்களாகிய எங்களை ஏமாற்றமும் கவலையும் அடையவைத்தது.

கல்விசாரா ஊழியர்களின் போராட்டத்தின்போது, ஏனைய பீடங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டபோதும், மிகப்பெறுமதியான ஆய்வுகூடப் பொருட்கள் கொண்ட விஞ்ஞான பீடத்திற்கு, மின்சாரம் வழங்கப்படாமைக்கு காரணம் என்ன? இதனால், பெறுமதியான ஆய்வுகூடப் பொருட்கள் பழுதடைந்து போயுள்ளதாக அறிகின்றோம். இதனையிட்டும் நாம் கவலையடைந்துள்ளோம்.

இது எவ்வாறு இருப்பினும், மாணவர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு, இடைநிறுத்தப்பட்ட பரீட்சைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அத்துடன், முதலாம் வருட மாணவர்களின் விரிவுரைகளும் ஆரம்பிக்கப்படவேண்டும்.

இது விடயத்தில்- துணைவேந்தரும், பல்கலைக்கழக நிர்வாகமும் மாணவர் நலனை முதன்மைப்படுத்தி, உரிய நடவடிக்கைகளை விரைவில் எடுக்கப்பட வேண்டும் என, விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் கேட்டிருக்கின்றது.

# கலங்கரை விளக்காய்



தேரோடும் வீதி
தேம்பி அழுதது
பாரோடு உன் உறுதி
பறைசாற்றப் பட்டது!

மக்களின் விடிவிற்காய்
மரணிக்கத் துடித்த
உன் இதய ஒலிகள்
எதிரியின் செவிகளில்
இன்றும்கூட
சம்மட்டியாய் ஒலிக்கிறது!

புதிய காந்தீயத்தை
தமிழீழத்தில் தந்த
தற்பரன் நீதானே!

ஈழ விடுதலை ஏட்டின்
அகிம்சையின் அதிகாரம்
உன்னால் என்றும்
அலங்கரிக்கப் பட்டிருக்கும்!

திலீபா!
புரட்சியின் புதிய வடிவத்தை
புரியவைத்த
புண்ணியன் நீயடா!

உன் நினைவுகள்
எம்மின விடுதலையின்
கலங்கரை விளக்காய்
என்றும் சுடரட்டும்!

சூரியநிலா
ஈச்சமோட்டை

## கலைத்தென்றல் விழா

(நெல்லியடி)

யாழ்.நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் நடாத்தும் கலைத் தென்றல் விழா நாளை சனிக்கிழமை பி.ப. 6.30 மணிக்கு வித்தியாலய திறந்த வெளியரங்கில் நடைபெறுமென பழைய மாணவர் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

# உதைபந்தாட்டப் போட்டிகள்

(நவிண்டில்)

வடமராட்சி வலய பாடசாலை அணிகளுக்கிடையில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகள் - இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு, யாழ்.நெல்லியடி மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானம், திக்கம் மைதானம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளன.

**16 வயதுப் பிரிவில்** - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து - யாழ்.உடுத்துறை வித்தியாலயமும், புலோலி வேலாயுதம் கல்லூரியை எதிர்த்து - கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியும், வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரியை எதிர்த்து - கொற்றாவத்தை வித்தியாலயமும்,

**18 வயதுப் பிரிவில்** - கரவெட்டி விக்கினேஸ்வராவை எதிர்த்து யாழ். உடுத்துறை மகாவித்தியாலயமும், பருத்தித்துறை ஹாட்லியை எதிர்த்து- கர்வெட்டி ஞானசாரியார் வித்தியாலயமும், நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை எதிர்த்து புலோலி வேலாயுதம் கல்லூரியும் விளையாடவுள்ளன. (116)

☆ ☆ ☆

நல்லூர் கோட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்றுவரும், உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் - இன்று பிற்பகல் 1.30 மணி முதல், யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டியில் -

**14 வயதுப் பிரிவில்** - யாழ்.இந்துக் கல்லூரியை எதிர்த்து - கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயமும்,

**18 வயதுப்பிரிவில்** - யாழ்.இந்துக் கல்லூரியை எதிர்த்து - கொக்குவில் இந்துக் கல்லூரியும்,

**16 வயதுப் பிரிவில்** - கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயத்தை எதிர்த்து - யாழ்.இந்துக் கல்லூரியும், கொக்குவில் இந்துக் கல்லூரியை எதிர்த்து - நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயமும் மோதவுள்ளன. (58)

## திருத்தப்படாத வீதிகள்

(இளவாலை)

நீண்ட காலமாக திருத்தப்படாத வீதிகளினால், மக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இளவாலை மணலடைப்பு வீதியும், அளவெட்டி செட்டிச்சோலை வீதியும் நீண்டகாலமாக திருத்தப்படாத நிலையிலேயே காணப்படுகின்றது.

## சங்கம நிகழ்வு

வலிகாமகோட்ட சனசமூக நிலையங்களுக்கான சங்கம நிகழ்வு, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில், வலிகாமம் கோட்டத்திற்குறபட்ட சனசமூகநிலையங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தநிகழ்வுகளில் கலந்து கொள்வதற்கு வசதியாக - வாகன வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், தெரிவிக்கப்படுகிறது. சனசமூக நிலைய பிரதிநிதிகள் அனைவரும் அன்றையதினம் காலை 7 மணிக்கு தத்தமது பிரதேசசபை உப அலுவலங்களில் கூடுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## ஆண்டு நிறைவு விழா

இலங்கை மெதடிஸ்த திருச்சபை- கட்டைவேலி ஆலய 182 ஆம் ஆண்டு நிறைவுவிழா, எதிர்வரும். ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு கட்டைவேலி ஆலயத்தில் இடம்பெறும்.

நன்றி செலுத்தும் ஸ்தோத்திர வழிபாடு பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முகாமைக்குரு அருட்திரு டி.அழகராஜா தலைமையில் இடம்பெறும்.

இந்த நிறைவு விழாவில், சிறப்பு விருந்தினராக- அருட்திரு எஸ்.ஜே. கதிரேசபிள்ளை அடிகளார் கலந்து கொண்டு, அருளுரை ஆற்றுவாரென சேகர உக்கிராணக்காரர் மு.எசேக்கியேல் தெரிவித்தார்.

YOGI BEAUTY PARLOUR
[Academy of Beauty Culture & Hair Dressing)
HOME SCIENCE ACADEMY
குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புகள் 22.09.2003 முதல் ஆரம்பமாகவுள்ளன
1) அழகுக் கலையும் சிகிச்சை முறைகளும் (Beauty Culture and Therapy)
2) முக ஒப்பனையும், தலை அலங்காரங்களும், மணப்பெண் அலங்காரமும்
3) இலகு வழித்தையல், கேக் ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரமும் மாச்சீனி மலர் அலங்காரமும் (Fondanl Structures and sugar Flowers) கிறிஸ்டல் அழகுப் பொருட்கள் தயாரித்தல்.
துணியில் வர்ண அலங்கரிப்பு
செயற்கை மலர் அலங்காரங்கள் (Flower Making and Bouquet Making)
இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.
சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.
(சி-1561)
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவில் முன்பாக)
T.P 222 2796

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜயகாந், ப்ரீதா நடித்த
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)
ULTRA FORCE- 2
(சி-1425)

ராஜா யாழ்ப்பாணம்.
அருண், வடிவேல், விஜயகுமார் நடித்த
காட்சிநேரம் 10.30, 2.30, 6.30. 9.30 (பு.நே)
(சி-1494)

# கதிர்காமர் ஒரு அரசியல்வாதியல்ல இராஜதந்திரியாகவே இருக்கமுடியும்

## 'லங்காதீப' பத்திரிகை கருத்து



(கொழும்பு)

லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு அரசியல்வாதியல்ல. அவர் ஒரு இராஜதந்திரியாக மட்டும் இருக்கமுடியும்.

இவ்வாறு லங்காதீப பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது. அண்மையில் திருகோணமலையில் பாதுகாப்பு நிலவரம் தொடர்பாக கதிர்காமர் வெளியிட்ட அறிக்கை தொடர்பாகவே இந்தக் கருத்து கூறப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வெளிநாட்டு அமைச்சராக இருந்தபோது, திருகோணமலைத் துறைமுகம் மீது புலிகள் பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தியிருந்தார்கள். இதன்போது டோறா படகுகளும், உலங்குவானூர்தி ஒன்றும் சேதமடைந்தும் குறிப்பிடத்தக்கது.

ஆனால் அன்று கதிர்காமர் பாதுகாப்பு நிலவரம் தொடாபாக கருத்துக்கள் எவற்றையும் கூறவும் இல்லை. ஆராய முயற்சிக்கவும் இல்லை.

தற்பொழுது எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு பாதுகாப்பு நிலவரம் தொடர்பாகப் பேசுவது வேடிக்கைக்குரியதாகவுள்ளது. இது அரசுக்கு எதிரான கருத்தாக லக்ஷ்மன் கதிர்காமர் கருதக்கூடும். ஆனால், இது கடற்படையின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டுள்ளதாக கடற்படைத் தளபதி தெரிவித்துள்ளார். இவ்விரு கருத்து முரண்பாடுகளும் லக்ஷ்மன் கதிர்காமர் அரசியலுக்கு உகந்தவர் அல்ல எனும் நிலையைத் தெரிவிப்பதாகவே அமைந்துள்ளன.

வெளிநாட்டில் இராஜதந்திரியாக இருந்த ஒருவரையே ஜனாதிபதி சந்திரிகா தேசியப் பட்டியல் மூலம் எம்.பியாக்கினார். அதன் பின்னர் கதிர்காமர் அமைச்சரவையில் சக்தி மிக்கதொரு அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார்.

இதனால் அடிப்படை அரசியல் தெளிவு இல்லாதவராகவே கதிர்காமர் காணப்படுகிறார். அவர் ஒரு இராஜதந்திரியாகவே மட்டும் செயற்படத் தகுதியுடையவர் எனவும் அப்பத்திரிகை கருத்து தெரிவித்துள்ளது.

# தமிழகத்திலுள்ள அகதிகளை திருப்பி அனுப்புமாறு கோரிக்கை

## மத்திய அரசிடம் ஜெயலலிதா விடுத்தார்

(புதுடெல்கி)



இலங்கையில் போர்நிறுத்தம் தொடர்வதால், இந்திய அகதிமுகாம்களில் வாழும் அறுபதாயிரம் இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்புவதற்கு ஒழுங்குகளைச் செய்யுமாறு, இந்திய மத்திய அரசை தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கேட்டுள்ளார்.

இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் ஆலோசகர் பிரஜேஷ் மிஷ்ராவிடம் தமிழ்நாடு அரசின் செயலாளர் லக்மி பிரஜோஷிடம், இலங்கை தமிழ் அகதிகளை அனுப்புவதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வது தொடர்பாக ஜெயலலிதா பேச்சு நடத்தியுள்ளார்.

# கண்ணிவெடி அகற்றிய நிபுணர் மிதிவெடி வெடித்ததில் காயம்!

மிதிவெடி அகற்றும்போது இடம்பெற்ற வெடிவிபத்தில் சிக்கிப் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வரணி - நாவற்காட்டில் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் 'ஹலோட் ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் நிறுவனத்தில் பணிபுரிபவரே கையில காயமடைந்தவர் ஆவார்.

இப்பகுதியில் முன்னர் இராணுவ முகாம் அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. (111,29)

## போரினால் குடும்பத் தலைவர்களை இழந்த

# 30 பெண்கள் மன்னாருக்கு சமாதானப் பாதயாத்திரை!

(மன்னார்)

போரினால் குடும்பத் தலைவர்களை இழந்த முப்பது பெண்கள், குருநாகலிலிருந்து சமாதான யாத்திரை ஒன்றை மேற்கொண்டு, நேற்று முன்தினம மன்னாருக்குச் சென்றனர்.

குருநாகலில் சமாதான முன்னெடுப்பு நிலைய உத்தியோகத்தராக உள்ள பெனடிக்ற் தலைமையிலேயே, இவர்கள் சென்றனர். இவ்வாறு மன்னாருக்குச் சென்றவர்களை, மன்னார் வாழ்வோதய இயக்குநர் எஸ். ஜேசுராசா வரவேற்றார். பின், வாழ்வோதய மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இவ்வாறு - சென்ற பெண்கள் மன்னாரிலுள்ள - வங்காலை, பேசாலை, பள்ளிமுனைப் பகுதிகளுக்குச் சென்று, அங்குள்ள பெண்களுடன் - அவர்களுக்கு போரினால் ஏற்பட்ட தாக்கங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடல்களை நடத்தினர்.

மன்னாரில் தங்கியுள்ள இவர்கள், இன்று தமது சொந்த இடத்திற்குச் திரும்பி செல்வர். இந்தக் குழுவில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பெண்களே கூடுதலாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (201)

# ஐ.தே.கவில் இணைந்துகொள்ளப்போவதாக முன்னாள் அமைச்சர் ரிச்சட் பத்திரன அறிவிப்பு!

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி சிரேஷ்ட உறுப்பினரும் முன்னாள் கல்வியமைச்சருமான ரிச்சர்ட் பத்திரன சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து விலகி, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளப் போவதாக அறிவித்துள்ளார்.

இந்த வாரத்துக்குள் தான் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளப்போவதாகத் தெரிவித்துள்ள ரிச்சர்ட் பத்திரன, அடுத்து வரும் மாகாணசபைத் தேர்தலில் தான் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக தென்மாகாணசபை முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணியின் ஆட்சியைக் கவிழ்க்கும் நோக்குடன், தனது கட்சியைப் பலப்படுத்தும் முயற்சிகளில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீவிரமாக முயன்று வரும் வேளையில், ரிச்சர்ட் பத்திரனவின் இந்த முடிவு அதற்கு பாரிய பின்னடைவுகளைத் தோற்றுவிக்கும் எனக் கருதப்படுகிறது.

இவரைத் தவிரவும் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த மேலும் பலர் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துகொள்ள ஆவலாக இருப்பதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சவுதி சிறை தீவிபத்தின்போது இலங்கையரும் இறந்தனரா?

## வெளிவிவகார அமைச்சு கேள்வி

சவூதி அரேபியாவின் தலைநகர் றியாத்தில் உள்ள சிறைச்சாலையொன்றில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற தீவிபத்தில் 67 கைதிகள் உயிரிழந்தனர்.

பங்களாதேஷ், இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த கைதிகள் தீவிபத்து இடம்பெற்ற சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

உயிரிழந்தவர்களில் இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாட்டைச் சேர்ந்தவர்களே அநேகம் பேர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்தவர்கள் யாராவது இந்தத் தீவிபத்தில் உயிரிழந்தார்களா என்ற தகவல்களைத் தருமாறு சவுதியிடம் இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சு கேட்டுள்ளது.

தீ விபத்து தொடர்பான விசாரணைகளை சவுதி பொலிஸார் நடத்தி வருகின்றனர்.



அரசாங்கம் இடைக்கால நிர்வாகத்தை, புலிகளுக்கு வழங்குவதை எதிர்த்து, புறக்கோடடையில் தேசிய பிக்குகள் முன்னணியினர் நடத்திய சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஒரு காட்சி

### மாங்குளத்தில் இலவச மருத்துவமுகாம்

தியாக தீபம் திலீபம் மருத்துவ சேவையினரால் கடந்த 13 ஆம் திகதி மாங்குளம் பகுதியில் சிறப்பு மருத்துவ முகாம் அமைத்து மருத்துவசேவை நடைபெற்றது. இந்த மருத்துவ சேவையில் கண் சிகிச்சை, பற்சிகிச்சை, இரத்தப் பரிசோதனை, குழந்தை மருத்துவம், பொது மருத்துவம் என்பன வழங்கப்பட்டன. இந்த மருத்துவ சேவையில மொத்தமாக 269 நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

### குளம் புனரமைப்பு

(கிளிநொச்சி)

உடையார்கட்டுக்குளம் நிகொட் திட்டத்தின்கீழ் புனரமைக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 3 கோடியே 40 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் 2 கோடி ரூபா குளக்கட்டு பிரதான வேலைகளுக்கும், 60 லட்சம் ரூபா பிரதான வாய்க்காலுக்கும், 22 லட்சம் ரூபா கிளை வாய்க்காலுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.



நேற்றுமுன்தினம் ஆரம்பமான வைத்தியசாலை சுகாதார ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால், வைத்தியசாலை உதவிப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள இராணுவத்தினரைப் படத்தில் காணலாம்.

# பாதாள உலகக்குழுவைச் சேர்ந்தவரை சிறையில் கொலைசெய்வதற்கு முயற்சி!

## சி.ஐ.டியினர் தகவல்

பாதாள உலகைச் சேர்ந்த ஒருவரை சிறையில் வைத்து கொலை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படடுள்ளன.

அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ரவி கருணாநாயக்க ஆகியோரைக் கொலை செய்வதற்காக நாவல நியாங் பாதாள குழு தலைவர்களினால் நியமிக்கப்பட்டவர் அஜித். தற்போது தற்போது வெலிக்கடை சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அஜித்தையே படுகொலை செய்ய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாக சி.ஐ.டியினர் தெரிவித்துள்ளனர்.

சிறையில் உள்ள அஜித்தை அதே சிறையில் உள்ள இன்னொரு பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் மூலம் கொலை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது. சி.ஐ.டியினருக்கு இது தெரிய வந்ததால் இந்த முயற்சி முறியடிக்கப்பட்டது.

அஜித் மூலமாக பல உண்மைகள் வெளிவரும் என தெரிந்தமையாலேயே அவரைக் கொலை செய்ய முயற்சித்ததாக தெரியவருகிறது. இது தொடர்பான புலன் விசாரணைகளை சி.ஐ.டியினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# தலதா மாளிகை மீதான தாக்குதல்; வழக்கு மீதான தீர்ப்பு அடுத்தமாதம்!

கண்டி தலதாமாளிகை மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத்தாக்குதல் தொடர்பாக சந்தேக நபர்கள் மீதான வழக்கின் தீர்ப்பு அடுத்தமாதம் 15 ஆம் திகதி அறிவிக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் கண்டி மேல் நீதிமன்றில் சந்தேகநபர்கள் மூன்று பேரை ஆஜர்படுத்தி நடந்த விசாரணைகளை கேட்டறிந்த நீதிபதி டி.சி.எஸ்.லோக்கம்வசம் அடுத்த மாதம் 15 ஆம் திகதி இது தொடர்பான தீர்ப்பினை வழங்குவதாகத் தெரிவித்தார்.

1998 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் திகதி காலையில் கண்டி தலதாமாளிகையில் நடந்த குண்டுத்தாக்குதலில் 23 பேர் மரணமடைந்ததும, பலர் காயமடைந்ததும், ஒரு கோடி ரூபா பெறுமதியான சொத்தழிவு ஏற்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந்தச் சம்பவம் தொடர்பாக நான்குபேர் மீது குற்றம் சுமத்தப்பட்டபோதும், மூன்று பேர் மட்டுமே கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் மற்றையவர் தலைமறைவாக வாழ்வதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (01)

# எமக்கு நீதியான தீர்வு கிடைக்காவிட்டால் புலிகளோடு இணைந்து போராடவும் தயார்

## நலன்புரி நிலைய சமாசத்தலைவர் தெரிவிப்பு



வலி.வடக்கு 'இடம் பெயர்ந்த மக்களின் பிரச்சனைகளிற்கு நீதியான தீர்வு கிடைக்காவிடில், விடுதலைப்புலிகளுடன் இணைந்து போராடுவதைத்தவிர, வேறுவழி எமக்கில்லை என நலன்புரிச்சங்கங்களின் சமாஜத் தலைவர் கணேஸ் தெரிவித்தார்.

மருதனார்மடம் - இராமநாதன் கல்லூரியில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே, அவர் இதனை தெரிவித்தார். அவர் மேலும் கருத்து கூறுகையில்-

நாம் 1990 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்துவருகின்றோம். இந்நிலையில், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்பட்டு, எமது சொந்த இடங்களில் மீளக்குடியமரக் கூடியநிலை உருவாகும் என எதிர்பார்த்திருந்தோம். ஆனால், அத்தகையதொருநிலை உருவாகவில்லை. இதற்காக நாம் பல வெகுஜனப் போராட்டங்களை நடாத்தினோம். எதுவித பயனும் கிடைக்கவில்லை. இந்நிலையில், இனிவரும் காலத்தில் நீதியான தீர்வை அரசு தராமலுக்குமானால், நாம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து போராடி, எமது நிலத்தை மீட்போம். இதில் வயது வேறுபாடின்றி அனைத்து நலன்புரி முகாம்களில் வாழும் மக்களும், போராளியாக மாறுவதற்கு தயாராகவுள்ளோம் என்பதை அரசிற்குத் தெரிவித்து கொள்கின்றோம்.

தமிழரின் பூர்வீக நிலங்களில் சிங்களவர் குடியமர்த்தப்படுகிறார்கள். நாம் ஏன் எமது நிலத்தில் குடியமர முடியாது? நாம் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் வாழ முடியாது. நாம் வாழும் நிலத்தின் உரிமையாளர்கள் எங்களை வெளியேறுவதற்கு நீதிமன்றம் செல்கிறார்கள். இதனால், நாம் பல நெருக்கடிக்குள்ளாகியுள்ளோம். நலன்புரி முகாம்களில் வாழும் மக்கள்- தொழில்களை இழந்து, பொருளாதார வசதிகளற்று, கல்வி வசதியற்று, சுகாதார சீர்கேடுகளுடன் வாழ்கிறார்கள். எமது பிள்ளைகளை பெரிய பாடசாலைகளில் சேர்ப்பதற்கு அதிக பணம் கேட்கிறார்கள். இதனால், பல மாணவர்கள் பாடசாலை செல்லமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. முக்கியமாக நலன்புரி முகாம்களில் கலாச்சார சீர்கேடுகள் நடைபெறுகின்றன. சிறுவயதிலேயே திருமணம் முடிக்கிறார்கள். இவற்றுக்கெல்லாம் காரணம், ஒரு பரப்பு காணியிலே மூன்று குடும்பங்கள் என்ற நெருக்கடியான வாழ்க்கை முறையேயாகும்.

சில உதவிகளை செய்து விட்டு, தாம் பல உதவிகள் செய்து தருவதாக சில நிறுவனங்கள் கூறுகின்றார்கள். இந்நிலை தொடர்பாக நாம் அவர்களிடம் - நீங்கள் உதவி செய்வதை நிறுத்திவிட்டு எம்மை எமது நிலங்களிற்கு செல்ல வழிசெய்யுங்கள் என கேட்டிருக்கிறோம். அப்படி அவர்கள் செய்யத்தவறின், அவர்களை இங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுப்போம்.

அத்துடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் எமது போராட்டங்களை கொச்சைப்படுத்தியதுடன், யாழ்.வந்த காணி அமைச்சரை சந்திப்பதற்கு தடையாக இருந்துள்ளார். இவரது இந்த நடவடிக்கை எமது மக்களை விசனமடைய வைத்துள்ளது. எமது வாக்குகளைப் பெற்றே, நாடாளுமன்றம் சென்றவர்கள் என்பதை மறந்துவிட்டார்கள். அரச, அரசசார்பற்ற அமைப்பினர் எம்மை வைத்து, தாம் வாழ்ந்து கொண்டு போகிறார்கள். எமது நலன்களுக்காக இரண்டு வருடங்களுக்குமுன் ஒதுக்கப்பட்ட ஒரு சிறுதொகைப் பணம் தற்போதுதான் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தில் இருப்பதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. நாம் தமிழீழ விடுதலைப்புலிகளை ஏக பிரதிநிதிகளாக ஏற்று, அவர்களின் இடைக்கால நிர்வாகம் கொடுக்கப்படவேண்டும் என்பதனை வலியுறுத்துவதுடன், தமிழீழவிடுதலைப் புலிகள்- நாம் எமது பகுதியில் மீளக்குடியமர பேச்சுவார்த்தைக்கு செல்லவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் சமூகவியற்துறை பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் மற்றும் மனிதஉரிமைகள் ஆணைக்குழு பிராந்திய இணைப்பாளர் வேணி ஆகியோர் உரையாற்றினர். வலி.வடக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள், நலன்புரி நிலையங்களின் பிரதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (08)

# திலீபன் நினைவுதினத்திற்கு பொலிஸார் தடைவிதிப்பு

## பருத்தித்துறையில் சம்பவம்

பாடசாலை வளவினுள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய எந்தவொரு நிகழ்வுகளையும் நடாத்த அனுமதிக்க முடியாதென, பருத்தித்துறைப் பொலிஸார் அறிவித்துள்ளனர். மந்திகைப்பகுதியில் அமைந்துள்ள புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலைக்குச் சென்ற பொலிஸாரே இவ்வறிவிப்பை விடுத்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது - தற்போது குடாநாடு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் தியாகி திலீபனின் நினைவு தினத்தை முன்னிட்டு, குறித்த பாடசாலையில் அலங்கார பந்தல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பாடசாலைக்கு வந்த பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் அலங்காரப்பந்தலையும் திலீபனின் உருவப்படத்தையும் அங்கிருந்து உடன் அகற்ற வேண்டுமென வற்புறுத்தியுள்ளனர். இவ்வாறான நிகழ்வுகளை பாடசாலைகளில் அனுஷ்டிக்க முடியாதெனவும், இந்நிகழ்வுகள் மாணவர்கள் தவறாக வழிநடத்தப்பட வாய்ப்புக்களை உருவாக்கிவிடுமெனவும். பொலிஸார் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனினும், பாடசாலை அதிபர் மற்றும் ஆசரியர்கள், ஒவ்வொரு பாடசாலையிலும் இவ் நினைவுதின நிகழ்வுகள் இடம்பெறுவதாக தெரிவித்ததுடன், பொலிஸாரின் பணிப்பை ஏற்க மறுத்தும்விட்டனர். இவ்விடயம் தொடர்பாக கண்காணிப் பக்குழுவினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரியவருகிறது. (202)

### வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்துறையில் வாலிப கிறிஸ்தவ சங்கத்தினால், வடமராட்சி கழகங்களுக்கிடையே எதிர்வரும் சனிக்கிழமை மதியமும், ஞாயிற்றுக் கிழமையும் பொமேர்ஸ் விளையாட்டு மைதானத்தில் வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நடாத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் நாளை சனிக் கிழமைக்கு முன்னர், தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் : ச.ரீஷேபன்
முகவரி : நீர்வேலி தெற்கு, கந்தசாமி கோவிலடி, நிர்வேலி.

இரண்டாவது அகவையில்



பெயர் : சி.விதுர்ணா
முகவரி : பில்லிங்கம், வண்டன்.

ஏழாவது அகவையில்



பெயர் : உ.நித்தியா
முகவரி : மீசாலை வடக்கு, வேம்பிராய்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------------------
முகவரி :--------------------------------
பிறந்த ஆண்டு:--------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்ப..


## பருத்தித்துறை சுகாதார அதிகாரி பிரிவில்

# போலியோ தடுப்புமருந்து வழங்கப்படும் இடங்கள்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட ஒரு வயது முதல் 10 வயதுக்கு உட்பட்ட அனைவருக்கும் 2003 ஆம் ஆண்டுக்கான முதலாவது சுற்று தேசிய போலியோ தடுப்புமருந்து வழங்கல், நாளை சனிக்கிழமை கீழ் குறிக்கப்பட்ட நிலையங்களில் வழங்கப்படவுள்ளன., இரண்டாவது சுற்று தேசிய போலியோ தடுப்புமருந்து அடுத்த மாதம் 18 ஆம் திகதி அதே நிலையங்களிலேயே வழங்கப்படுமெனவும், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை - வைத்திய அதிகாரியும், பதில் சுகாதார வைத்திய அதிகாரியுமான சி.கதிரவேற்பிள்ளை தெரிவித்தார்.

போலியோ தடுப்புமருந்து வழங்கப்படும் நிலையங்கள் பின்வருமாறு.

சோளங்கன் சனசமூக நிலையம், மணிய்காரன் தோட்டம் சிகிச்சை நிலையம், விக்கினேஸ்வரா சிகிச்சை நிலையம், கப்புதூ சிகிச்சை நிலையம், இராஜகிராமம் சனசமூக நிலையம், கரவெட்டி மத்திய மருந்தகமகப்பேற்று நிலையம். கவுந்தில் சனசமூக நிலையம், கோவிற்கடவை சனசமூக நிலையம், கட்டைவேலி சிகிச்சை நிலையம், உடுப்பிட்டி வி.சி.சிகிச்சை நிலையம், உடுப்பிட்டி சனசமூகநிலையம், இலகடி சனசமூக நிலையம், இமையாணன் மாதர் சங்கம், கலைமகள் பாலர் பாடசாலை, இலந்தைக்காடு சனசமூக நிலையம், வதிரி சிகிச்சை நிலையம், அல்வாய் தெற்கு வி.சி. சிகிச்சை நிலையம், அத்தாய் விநாயகர் பாலர் பாடசாலை, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, வல்லிபுரக் குறிச்சி கிராம அலுவலர் காரியாலயம், பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத்தெரு சிகிச்சை நிலையம், மத்திய மருந்தகம் பருத்தித்துறை.

தம்பசிட்டி கதிரவேற்பிள்ளை வாசிகசாலை, மாதனை மாதர் சங்கம், கற்கோவளம் சிகிச்சை நிலையம், திக்கம் சிகிச்சை நிலையம், வியாபாரிமூலை சிகிச்சை நிலையம், தொண்டமானாறு ஆரம்ப சுகாதார நிலையம், கெருடாவில் அம்பிகை பாலர் பாடசாலை, கொற்றாவத்தை அ.த.க பாடசாலை, பாலாவி இ.த.க பாடசாலை வல்வெட்டித்துறை வைத்தியசாலை, கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம், வல்வெட்டித்துறை ஆதிகோவிலடி சனசமூக நிலையம், வல்வெட்டி இ.த.க. பாடசாலை, கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, மணற்காடு பாலர் பாடசாலை, குடத்தனை மேற்கு சனசமூக நிலையம், குடத்தனை கிழக்கு சனசமூக நிலையம், பொற்பதி சனசமூக நிலையம், அம்பன் அ.மி.த.க. பாடசாலை, குடத்தனை வடக்கு சனசமூக நிலையம், மருதங்கேணி சிகிச்சை நிலையம், செம்பியன் பற்று அ.த.க.பாடசாலை, ஆழியவளை பாடசாலை, வெற்றிலைக்கேணி கிராம அலுவலர் காரியாலயம், உடுத்துறை கிராம அலுவலர் காரியாலயம் முள்ளியான் சந்திக் கட்டிடம், கோக்கறுப்பு நித்திய வெட்டை நிலையம், சுண்டிக் குளம் நிலையம். மாமுனை இ.த.க பாடசாலை ஆகிய இடங்களிலேயே போலியோ சொட்டுமருந்து வழங்கப்படவுள்ளன.

இதேவேளை - நெடுந்தீவு கிழக்கு மத்தி மேற்கு ஆகிய பகுதி மக்களுக்கு சுப்பிரமணிய வித்தியாலயம், மாவட்டவைத்தியசாலை பொது நூலகம் ஆகிய பகுதிகளில் போலியோ சொட்டு மருந்து வழங்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை 7.30 மணிக்கும் மதியம் 12.30 மணிக்கும் இடையில் சொட்டு மருந்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு நெடுந்தீவு பகுதி பொது சுகாதார பரிசோதகர் க.அருந்தவராஜா தெரிவித்துள்ளார்.

(113,58,116)





கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கலாசார கூட்டுறவுப் பெருமன்றத்தால் நடாத்தப்பட்ட கூட்டுறவாளர் கௌரவிப்பு விழாவில் கல்வி உத்தியோகத்தர் காந்திமதி நாதன் உரையாற்றுவதையும், விழாவில் கலந்துகொண்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

### 8 வருடங்ளில் பதினொருபேர் காலை இழந்துள்ளனர்

யாழ்.குடாநாட்டில் 1995 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை மதிவெடிகளில் அகப்பட்டு 11 பேர் உயிரிழந்துள்ள தாக யாழ்.மாவட்ட மிதிவெடிகள் செயற்பாட்டுக் குழு விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்காலப்பகுதிக்குள் 437 பேர் மதிவெடியில் சிக்கிகாயப்பட்டு ஊனமுற்றோர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (122)

# திறமையும், தூய்மையான அணுகுமுறையுமே



**காலம் மாறுகின்றபோது, கலைகளும், மாறத்தான் செய்கின்றன. இது தவிர்க்க முடியாது. ஆனாலும், அடிப்படைமரபு மாறக்கூடாது என்கிறார் நந்தினி சிவராஜன். இவர் இராமநாதன் கல்லூரியினதும், உடுவில் பரதகலா நிவேதன் நாட்டிய கலாமன்றத்தினதும், நடன ஆசிரியையாக இருப்பவர். தேசியமட்ட ரீதியில் பரிசு பெற்ற பல நாட்டிய நாடகங்களை நெறியாள்கை செய்த நந்தினியை நாம் சந்தித்தபோது.....**



மாணவி ஒருவருக்கு ஆசி வழங்கும் நந்தினி சிவராஜன்

**கலைத்துறையில் தங்கள் நடனக் கலையை தெரிவுசெய்தமை பற்றிக் குறிப்பிட முடியுமா?**

நான் குழந்தையாக இருந்தபோது, என்னுடைய தாத்தா - எனது கால்களில் சலங்கையைக் கட்டி, மேசை மீது நிறுத்தி கால்களை ஆட்டுவிப்பார். அவருடைய ஆசை நான் ஒரு நடனக்கலை விற்பன்னராக வரவேண்டும் என்பது. எனது தாயாருக்கும் நடனத்தின் மீது தீவிர பற்று. அதனால் பல நடன நிகழ்வுகளுக்குச் செல்லும்போது, என்னையும் அழைத்துச் செல்வார். இதனால், எனக்கும் நடனத்தின் மீது பற்றும் ஆர்வமும் ஏற்பட்டது. அத்தோடு, நான் நடனக் கலை கற்ற குருமார்களின் திறமையும், தூய்மையான அணுகுமுறையுமே என்னை இந்தக்கலையிலே உயரவைத்தது என்று கூறலாம்.

**தாங்கள் ஆசிரிய சேவையில் நீண்டதொரு அனுபவத்தைக் கொண்டுள்ளீர்கள். அதுபற்றிக் குறிப்பிட்டமுடியுமா?**

எனது 26 வருட ஆசிரியர் சேவையில் பலவிதமான மாணவர்களைக் கண்டுள்ளேன். ஒவ்வொரு மாணவரும், ஒவ்வொரு விதமாக இருப்பார்கள். பொதுவாக என்னுடைய ஆரம்பகால மாணவர்கள் பண்பு, குருபக்தி, என்பவற்றை நிறையவே கொண்டிருந்தார்கள். தற்போதைய மாணவர்களிடம் அவை ஓரளவு குறைவாகவே காணப்படுகிறது. காலத்திற்கு காலம் இடம்பெற்ற சமூக கலாசார மாற்றங்கள் எமது மாணவர்களை வெகுவாகப் பாதித்துள்ளது. மாணவர்கள் பெற்றோருக்கும், சமூகத்தினருக்கும் பயனுள்ளவர்களாக உருவாகவேண்டும். ஆற்றுகைக் கலைகளிலே பரதக்கலைக்கு நீண்ட பயிற்சி தேவை. இதற்கு மாணவர்கள் வழங்கிவரும் ஒத்துழைப்புக் குறைந்துகொண்டே வருகிறது.

**நடனத்துறையில் உங்களை இனம்காட்டிய படைப்புப் பற்றி கூறமுடியுமா?**

தமிழ்த்தினப் போட்டிகளில், ஒவ்வொரு முறையும் எனது நாட்டிய நாடகங்கள் தேசிய மட்ட பரிசைப்பெறும் வாய்ப்பைக் கொண்டிருக்கின்றன. 'அகதிகள் படும் அவலங்கள்' எனும் நாட்டிய நாடகத்திலே, அகதிகளுடைய அவலத்தை 10 நிமிடங்கள் கொணட இசைமூலம் வெளிப்படுத்தியமை பலராலும் பராட்டப்பெற்றது. இது தொலைக்காட்சிகளில்கூட ஒலிபரப்பாகியது. 'சாந்தி சமாதானம்' என்ற படைப்பும் மக்களின் அவலநிலையை மையமாக வைத்தே உருவாக்கப்பட்டது. இப்படிக் கூறக்கூடிய படைப்புக்கள் எனும்போது, பல படைப்புக்கள் உள்ளன.




# நாட்டியக்கலையில் என்னை உயர வைத்தது

**பரதக்கலை தற்போது எவ்வாறு மாற்றத திற்குள்ளாகியுள்ளது என்பது பற்றி தங்கள் கருத்து என்றபோது....**

இன்று பரதக்கலை பல்கலைக்கழகம், ஆசிரியர் கலாசாலை போன்ற உயர்கல்வி நிறுவனங்களிலும் கற்பிக்கின்ற பெருமையைப் பெற்றுள்ளது. அதனூடாக மாணவர்களின் மேல்நிலை கல்வியாக அது காணப்படுகிறது. பரதக்கலையானது ஈழத்தினுடைய பல பாகங்களிலும் பரவிக் காணப்பட்டாலும், யாழ்.மண்ணிலேதான் உண்மையான, தூய்மையான பரதவிதி முறைகளோடு கூடிய, நடன அமைப்புக்களைக் காணக்கூடியதாகவுள்ளது. ஏனைய இடங்களில் பொதுவாக பரதம் காட்சி வெளிப்படுத்துகையாக மட்டுமே அமைகிறது. தற்போது பண்டைய கலைமரபுகள் சில அருகிவருகின்றன. இது வேதனைக்குரிய நிலையாகும். 'கலைகளை வளர்ப்பதன்மூலம் நாம் வளர்கிறோம்'. எனும் எண்ணத்தோடு அனைவரும் கலைகளின் வளர்ச்சிக்காகப் பாடுபடவேண்டும்.

**நடனத்துறை சார்ந்த மட்டில் தங்களுக்கு குருவாக இருந்தவர் பற்றிக் கூறுவீர்களா?**

ஆரம்பத்திலே மகாவித்துவான் வீரமணி ஐயரிடம் பயின்றேன். பின்னர் கொக்குவில் கலாபவன ஸ்தாபகர் ஏரம்பு சுப்பையா பிள்ளையிடம் பயின்றேன்.

அதன்பின், இந்தியா சென்று அடையாறு கே.லக்ஸ்மணனிடம் கற்றேன் "தாரமும் குருவும் தலைவிதிப்பயன்" என்பார்கள். அந்த வகையில் ஏரம்பு சுப்பையா ஆசிரியர் அன்பானவர். அதேவேளை, கண்டிப்பும் மிக்கவர். மிக நிதானமாக, இலகுவாக, நடன பாவங்களைக் கற்றுத்தந்தவர். தூய்மையான வெளிப்பாடுகளை நேர்த்தியாக வெளிப்படுத்தும் தன்மைகளை எடுத்துக்காட்டிப் புகட்டியவர். அவரை நான் என்றுமே மறக்கமாட்டேன்.

**பரதத்துறையில் நீங்கள் சாதிக்க நினைபபது?**

நான் தற்போது பரதகலா நிவேதன் நாட்டியாலயத்தை நடாத்தி வருகிறேன். எனது மாணவர்கள் பரதத்துறையிலே சிறந்து விளங்க வேண்டும். அதற்காக தூய்மையான பரதக்கலையை அவர்களுக்கு கற்பிக்கவேண்டும். காலப் பரிமாணத்திற்கேற்ப வர்ணம், உருப்படிகள் என பன இடத்திற்கு இடம்மாறுபடுகின்றன. இவற்றை நாம் பழைய முறையிலேயே கற்கும் சூழ்நிலையைக் கொண்டுவரவேண்டும். மாணவர்களின் கலை உணர்வுகளைப் பயன்படுத்திப் பல புதிய தரமான படைப்புக்களை படைக்க வேண்டும் என்பதே எனது விருப்பமாகும்.

**பர்தத்துறையில் ஆண்களின் பங்களிப்பு எவ்வாறாக இருக்கிறது?**

இற்றைக்கு மூன்று நான்கு தசாப்தங்களுக்கு முன் இருந்த பங்களிப்பு, இன்றில்லை என்றே கூறவேண்டும். இருந்தாலும், உயர்தர வகுப்பிலும், பல்கலைக்கழகங்களிலும் ஒரு சில மாணவர்களைக் காணக் கூடியதாகவுள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரிக்கவேண்டும். அவர்களும் பரதத்துறையில் தமக்கும் ஒரு இடத்தை தக்கவைக்க வேண்டும் என்பதே எனது கருத்தாகும்.

**நடனத்துறையில் தாங்கள் பெற்ற விருதுகள் பற்றி கூறுவீர்களா?**

ஆம், நான் எனது மாணவப் பருவத்தில் பல்வேறு நடனப் போட்டிகளிலும் பங்கு கொண்டு மாவட்டமட்டம், தேசிய மட்டம் என பல நிலைகளில் பரிசுகளை பெற்றுள்ளேன். அத்தோடு, நாட்டிய கலாவித்கர், பரதகுடாமணி, வலய மட்ட நல்லாசிரியர் விருது, பழைய மாணவர்களுடைய கௌரவிப்பு என்பவற்றையும் பெற்றுள்ளேன்.

**'ஆர்க்கொலோ சதுரர்' எனும் நாட்டிய நாடகத்தில் பங்குகொண்ட அனுபவம் எவ்வாறு இருக்கிறது.**

இந்த நாட்டிய நாடகம் நடன ஆசிரியை சாந்தினி சிவநேசனால் தயாரித்து, பல மூத்த கலைஞர்களுடைய பங்களிப்புடன் மேடையேற்றப்பட்டது. இதில், நான் ஒரு தாயாக நடித்திருக்கிறேன். எனது மகனும், மகளுமே இரு பிள்ளைகளாகவும் நடித்தார்கள். இது ஒரு புதிய உத்வேகத்தை எனக்கு அளித்தது. ஒரு கலையாயனத்தில் முதிர்ந்த பல கலைஞர்களுடன் இணைந்து சென்றமை வித்தியாசமான அனுபவத்தை தந்தது. எனது மாணவர்களுக்கு தினமும் நான் செய்முறை பயிற்சிகளை வழங்கிய அனுபவம் இருந்தமையினால், இதில் பங்கேற்கும்போது சுலபமாக இருந்தது.

**இறுதியாக நடனக் கலைத்துறையிலே ஈடுபடுபவர்களுக்கு கூறவிரும்புவது யாது?**

பழைய கலைமரபுகளை அவற்றின் அடிப்படைச சட்டம் மாறிவிடாமல், மாற்றங்களைக் கொணர்ந்து வளர்க்கவேண்டும். புதிய பாணிகளை அறிமுகப்படுத்தும்போது, அது எமக்கே உரியதாக இருக்கவேண்டும். வேறொருவருடைய படைப்பை மரபைத் திருடியதாக இருக்கக்கூடாது. பழைய மரபுகளைச் சிலர் தமது வசதிக்கேற்ப மாற்றியமைத்திருக்கிறார்கள். இது நிறுத்தப்படவேண்டும். நடனத்துறையை முழுமையாக அறியாது ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களின் ஆதிக்கம் குறையவேண்டும். மாணவர்கள் குருபகதியை வளர்க்கவேண்டும். தூய்மையான பாவ, ராக, தாள அமைவோடு பரதக்கலை மிளிரவேண்டும் என்பதே எனது விருப்பாகும்.

**நேர்காணல்:இ. விஜேந்திரன்**

# பிள்ளைகள் மனதில் தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டியது பெற்றோர் கடமை

சிறுவர்களைத் தன்னம்பிக்கை மிகுந்தவர்களாக மாற்றிக் கொள்வதில் பெற்றோர்கள் பின்வருவனவற்றை அவர்களிடையே வளர்த்துக்கொள்ள முயலவேண்டும்.



* குடும்பத்தில் அவர்கள் முக்கிய அங்கத்தவர்கள் என்ற உணர்வை ஏற்படுத்துதல் முக்கியமாகும். இப்படியான உணர்வு அவர்களிடையே இலலாதவிடத்து, வேணடப்படாத நண்பர்களுடன் சேர்ந்து அங்கத்தவர் என்ற உணர்வை பெற முயலக்கூடும்.

*தாம் பெறுமதி மிக்கவர்கள் என்ற மனநிலையை உருவாக்குதல் வேண்டும். இது தாம் கௌரவம் மிககவர்கள் என்ற உணர்வை, அவர்களிடையே வளர்த்துக்கொள்ள உதவும்.

* தன்னைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருத்தல் வேண்டும். சிறுவர்கள் செய்யும் செயல்களைக் கூடுதலாகப் புகழ்ந்து பேசுதல் சிறந்ததாகும். அவர்கள் பெரியவர்களாக வளரும்போது, சமுகத்திலிருந்து அதிகளவில் விமர்சனங்களுக்கு ஆளாவர்கள். இதனால், சிறுவயதில் இருந்தே புகழும் பழக்கத்தில் தம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டால், அவர்களுக்கு எதிரான விமர்சனங்களை இலகுவில் புறக்கணித்துவிடும் மனப்போக்கைப் பெற்று விடுவார்கள். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்குத் தேவையான செயற்பாடுகளை இனங்கண்டு வளர்த்துக் கொள்வதில், பெற்றோர்கள் இணைந்து செயற்படுவதை விரும்புவார்கள். இதனால், அவர்களின பாடசாலை நிகழ்வுகளிலும் பங்கு பற்றுதல்மூலம் அவர்கள் செய்வதை பெற்றோர்கள் விரும்புவதாக கருதுவார்கள்.

உங்கள் பிள்ளைகளின் பிரச்சினைகளை நீங்கள் உற்றுக் கேட்கும்போது, உடன் அதற்கான எதிரிடையான கருத்துக்களைக்கூற வேண்டாம். இப்படியான கருத்துக்களால், பிரச்சினைகளை உங்களுடன் விவாதிக்க முனவரத் தயங்குவார்கள். அப்படி இடையே உங்கள் கருத்தைச் சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டாலும் பின்வருமாறு கூறிக்கொள்ளலாம்.

"இந்த இடத்தில் பிரச்சினை ஒன்று உள்ளது" நாம் இதறகு என்ன செய்யலாம்? இவ்வாறாக நாம் கூறுவதன் மூலம் அவர்களின் பிரச்சினைகளில் மாற்றம் தேவைப்பட்டாலும், ஏற்கும் மனநிலையைக் கொடுக்கிறது.

இதைவிட, சட்டங்களைத் தெளிவுபடுத்துதல் வேண்டும். ஒரு பிரச்சினையை அவர்களுடன் விவாதிக்கும்போது, அதன் நடைமுறைகள் (Rules), எல்லைகள், இறுதி விளைவுகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதில் நாட்டம் காட்டுவார்கள்.

மேலும் அவற்றைச் செயற்படுத்தத் தவறும்போது ஏற்படும் எதிர்விளைவுகளையும் அவர்களுக்குத் தெளிவுபடுத்தல் வேண்டும். ஒழுஙகுமுறைகள் கட்டுப்பாட்டில் செயற்படும உணர்வை அவர்களுக்குக் கொடுக்கும்.

உங்கள் குற்றங்களை, தவறுகளை நீங்கள் ஏற்றுக்கொள்வதாகவும், அவற்றிலிருந்து பெற்றோராகிய நீங்கள் கற்றுக்கொள்வதாகவும், பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுங்கள். இதன்மூலம் அவர்களும் தம்முடைய குற்றங்களை ஏற்று, அதிலிருந்து கற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்கிக்கொள்வார்கள்.

இத்துடன் பாலியல், போதைப் பொருட்கள், மதம் தொடர்பான உங்கள் உணர்வுகளைப் பிள்ளைகளுடன், பகிர்ந்துகொள்ளுங்கள். இதிலிருந்து, அவர்கள் பின்பற்றக் கூடாதவற்றைத் தெரிந்து கொள்வதற்கு வழிவகுக்கும்.

# உடல் நலம்



காலையில் நாம் அலுவலகத்திற்குச் செல்லும் பொழுது மனதில் முழுமையான புத்துணர்ச்சியுடன் செல்லவேண்டும். இப்படிசென்றால்தான் நம்முடைய வேலையை முழுமையாகச் செய்ய முடியும். காலையில் மலரக்கூடிய பூக்கள் போன்று நாமும் புதிதாகவும், உற்சாகத்துடனும் முழு ஆற்றலுடனும் செய்யமுடியும்.

இதற்கு மாறாக, இரவு முழுவதும் கண் விழித்து, வேலைச் சக்திகளை இழந்து வீணாக செலவாக்கி விட்டு, தாமதமாகப் படுக்கையிலிருந்து எழுந்து வேலையை ஆரம்பித்தால், அது முழுமையாக இருக்காது. இதனால், பாதிப்பணியைத்தான் செய்ய முடியுமே தவிர முழுப்பணியைச் செய்யமுடியாது.

ஒவ்வொரு நாளும் நாம் முழுத்தன்மையுடன் இதை பாதுகாத்து வரவேண்டும். நம்முடைய சக்திகளை தேவையில்லாமல் ஊதாரித்தனமாக வீண் செய்யக்கூடாது, சேமித்து வைக்க வேண்டும். அப்போதுதான் வாழ்கையை ஆரோக்கியத்துடன் கழிக்கமுடியும்.

அதிகமாக வேலை செய்வதன் காரணமாக விரைவில் உடல்

வமாக செய்யமுடியாது.

முன்னேற வேண்டும் என்ற ஆசை

மெதுவாகவும், விடாமலும் வேலை செய்வதைவிட அதிக பலனைப் பெற்றுவிடமுடியாது.

நம்முடைய மூளை, உடல், ஆகியவற்றின் ஆற்றலை மிகவும் குறைவாக மதிப்பிட்டுச் செலவிட்டு விடுகின்றோம்.

ஆரோக்கியம் என்பது - கிணறு எப்போதும் சுரந்து கொண்டிருக்கும் என்றெண்ணி, இளமையின் ஆற்றலை வீண்விரயம் செய்து விடுகின்றோம்.

கிணறு வறட்சியடைய ஆரம்பித்ததும், நம்முடைய ஆற்றலின் மதிப்புத் தெரியவரும். மழை காலத்தில் ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும். ஆனால், கோடை காலத்தில் வற்றி வறண்டு விடுகின்றன. இதனால், அணைக்கட்டு மூலம் கோடைக் காலத்திற்கு வேண்டிய நீரை தேக்கி வைத்துக் கொள்வது நடைமுறையான செயல்.

அதேபோல் நம்முடைய உடல், மூளை ஆகியவற்றில் ஆற்றல் என்னும் ஆறு - நமது முதுமைப் பருவத்தில் வற்ற ஆரம்பிக்கின்றன.

இதனால், இளமையில் ஆற்றலைச் சீராகச் செலவிட்டு வந்தால், முதுமையிலும் நாம் துடிப்புடன் செயலாற்ற முடியும்.

உடல் ஓர் இயந்திரம் போன்றது. நமது உடற்சக்தியிலோ, மூளைச் சக்தியிலோ வறட்சி ஏற்பட்டு விட்டால், அது எவ்வளவு சிறிதாக இருந்தாலும் நாம் செய்யும் எல்லா வேலைகளிலும் இதன் தாக்கம் பிரதிபலிக்கச் செய்யும்.

# வெற்றியின் பலம்

தளர்ச்சி ஏற்பட்டு வருகின்றது. முன்னேறவேண்டும் என்ற ஆர்வம் இருக்க வேண்டும்தான், அதற்காக நமது உடலை வருத்தி வேலை செய்யவேண்டியதில்லை. அப்படி ஓய்வில்லாமல் வேலை செய்வதால், விரைவில் களைப்படைந்து விடுகின்றோம். இதனால் மேற்கொண்டு வேலைகளை ஆர்வத்தினால் கடுமையாக உழைத்த போதிலும், ஓயாது வேலை செய்து, ஓய்வு எடுக்காமல் இருப்பது என்பது எமக்கு நாமே நன்மை செய்வதற்குப் பதிலாகத் தீமையை உருவாக்கிக் கொள்வதாகும்.

அல்லும் பகலும் அயராது வேலை செய்துகொண்டிருப்பது , அடிக்கடி ஓய்வு எடுத்துக் கொண்டு

இளைமையில் ஓய்வின்றி உழைத்துவிட்டு முதுமையில் எந்தவிதச் செயலும் செய்யமுடியாதவர்களாகப் போய்விடக்கூடாது. மின்சார விளக்கை எரியச் செய்வதுபோல, ஒளி வெள்ளமாக இருந்த நாம் ஒரு மெழுகு வர்த்தியைக்கூட எரியச் செய்ய இயலாதவர்களாக இருந்துவிடக்கூடாது. ஒளியுடன் என்றும் இருக்கவேண்டும்.



# குழந்தை நலம்



## தாய்ப்பால் முதல் ———— முதலுதவி வரை

### திட உணவு

குழந்தைக்கு நான்கு மாதமாகி விட்டதா? பருப்பு அவித்த நீர் அல்லது கரட் அவித்த நீர் என்பவற்றைப் பருகக் கொடுக்கலாம்.

ஐந்து மாதங்கள் ஆனவுடன் காய்கறி மற்றும் பழங்களைக் கொடுக்கத் தொடங்கலாம். ஆறாவது மாதத்தில் முட்டையிலுள்ள மஞ்சட் கருவைக் கொடுப்பது நல்லது. இதனுடன் இட்லியும் உண்ணக் கொடுக்கலாம்.

அரைத் தேக்கரண்டி நெய் சேர்த்துக் கொடுக்கலாம் (குழந்தையின் வளர்ச்சிக்கு கொழுப்புச்சத்துத் தேவையானதே). ஆனால், குடும்பத்தில் உள்ளவர்கள் கொழுப்புச்சத்து அதிக்மானவர்களாக இருந்தால், குழந்தைக்கு கொழுப்புச்சத்து உணவுகளைத் தவிர்க்கவும்.

இட்லியை இனிப்பான பணடங்களுடன் சேர்த்துக் கொடுப்பதைவிட, ரசம் போன்றவற்றுடன் சேர்த்துக் கொடுக்கலாம். ஏனெனில், இது இனிப்பு மட்டுமல்லாது, சுவைகள் குழந்தையின் நாக்குக்குப் பிடிபட்டு விடுவது நல்லது. அப்போதுதான் குழந்தை வளர்ந்த பின்பு பலவகை உணவுகளைக் குழந்தை உண்ணத் தயாராகும்.

ஏழாவது மாதத்தில் விரும்பிய பழங்களைக்கூடக் கொடுக்கலாம். குழந்தைக்குப் பத்துமாதம் ஆனதும் சோற்றுடன் பருப்பையும் குழைத்துப் பிசைந்து, அவித்த மரக்கறித் துண்டுகளையும் சேர்த்துக் கொடுக்கலாம்.

மரக்கறித் துண்டுகளைக் குழந்தை துப்பிவிடுகிறது என்றால், அவற்றைச் சூப்பாக்கிக் கொடுக்கலாம். தினமும் ஒருமுறை இப்படிச் சாப்பாடு கொடுப்பது நல்லது. சிலவேளைகளில் பாண் துண்டில் வெண்ணெய் மற்றும் ஜாம் பூசிக் கொடுக்கலாம்.



எப்போதும் ஒரேநாளில் புதிதாக இரண்டுவித உணவு வகைகளைக் குழந்தைக்குக் கொடுக்கவேண்டும். சில நாட்கள் இடைவெளிக்குப் பிறகே, அடுத்த புதிய உணவுப் பொருளை அறிமுகப்படுத்துங்கள். அப்போதுதான், குழந்தைக்கு வயிற்றுக் கோளாறு, வேறு ஏதாவது சிக்கலோ ஏற்பட்டால், அது எந்த உணவினால் ஏற்பட்டது என்பதைத் தெளிவாகக் கண்டுபிடிக்க முடியும்.

ஐந்து மாதமாகும்போதே குழந்தைக்குப் பழங்களைக் கொடுக்கத் தொடங்கிவிடலாம். அப்பிள், வாழைப் பழம், பப்பாப்பழம் ஆகியவற்றைக் கொடுப்பது சிறந்தது.

நன்கு பழுக்காத பழங்களைத் தவிர்ப்பது நல்லது. விற்றமின் சி சத்துள்ள தோடம்பழம், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம் ஆகியவற்றைத் தவறாமல் குழந்தைக்குக் கொடுக்கலாம்.

இதில் குழந்தையின் தாய்க்கு எந்தப் பழங்கள் ஒவ்வாமையாக இருக்கின்றதோ, அவ்வாறான பழங்கள் குழைந்தைக்கு ஒன்றரை வயது ஆனபிறகு - இதுபோன்ற பழங்களைக் கொடுத்துப் பார்க்கலாம். அதற்கு முதல் கொடுக்கக் கூடாது.

கஜு, பேரீச்சம்பழம் ஆகியவை குழந்தையின் உடலுக்கு நல்லது. ஆனால், இவற்றைச் சாப்பிட்டபின்பு மறக்காமல் வாயைச் சுத்தம் செய்து விடுங்கள்.

# மருத்துவ ஆலோசனை

**பெண் நோயியல் தொடர்பாக, எமது வாசகர்கள் அனுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்துள்ளார்கள் பெண் நோயியல் வைத்திய நிபுணர்கள் - Dr.G.பவானி மற்றும் Dr.A.கெனத் ஆகியோர்.**

**என் மகளின் வயது 14. இரண்டாண்டுகளாக் மாதம் தவறாமல் மாதவிலக்கு ஏற்படுகின்றது. இப்போது அவர் அனுபவிக்கும் வலி கொஞ்ச நஞ்சமல்ல. சில சமயம் மயக்கமும் வருகின்றது. பாடசாலை செல்வதற்குப் பயப் படுகிறாள். பரீட்சைக் காலங்களில் மாதவிலக்கு வந்து விடுமோ என்ற பயத்தில் இருக்கிறாள். இதற்கு என்ன செய்யலாம்?**

மாதவிடாய் காலத்தில் வயிற்று வலி ஏற்படுவது மிகப் பொதுவான விடயமாகும். இது குருதிப்போக்கு ஏற்படுவதற்கு ஒன்று அல்லது இரண்டு நாட்கள் வரை நீடிக்கலாம். இதனை நாம் **Primary Daysmenorrgvea** என்கின்றோம். பலருக்கு வயிற்றுவலியுடன் தலையிடி, ஓங்காளம், வாந்தி என்பனவும் ஏற்படலாம், இவ்வலியைக் குறைப்பதற்கு வலி நிவாரணிகளைப் பயன்படுத்த முடியும். பொதுவாக பனடோல் குளிசைகளை பயன்படுத்தலாம். வயிற்று வலி ஆரம்பிப்பதற்கு முன்பே இவற்றை பாவிக்கத் தொடங்குதல் அவசியமாகும். இவ்வாறு வயிற்றுவலியைக் கட்டுப் படுத்த முடியாவிடில் வைத்திய உதவியை நாடுவது நன்று. பொதுவாகத் திருமணமாகி குழந்தைகளைப் பெற்றவுடன் இவ் வலி தானாக அகன்றுவிடும்.

**கருப்பையில் உள்ள குழந்தை பிறக்கு முன்னே ஆணா, பெண்னா என்பதை அறிந்து கொள்ள முடியுமா?**

நவீன ஸ்கான் (**Ultra sound scan**) மூலம் இது சாத்தியமானது. ஆனால், சில நாடுகளில் குழந்தை பிறக்கும் முன்பே அதன் பாலை அறிவது சட்டரீதியாக தடைசெய்யப்பட்டுள்ளது. உதாரணம் இந்தியா, சீனா. குழந்தை ஆணா, பெண்ணா என்பதை அறிவதைவிட அது பிறக்கும்போது எதுவித பிரச்சனையும் ஏற்படாமல் பிறக்கவேண்டும் என்பதே ஒரு தாயின் எதிர்பார்ப்பாக இருக்கவேண்டும்,

**பெண்நோயியல் சம்பந்தமான பிரச்சினைகள், சந்தேகங்களைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பிவைத்தால், அதற்கான மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.**

சிநேகிதியே
"நமது ஈழநாடு"
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

# கீரை வடை



**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| உழுத்தம் பருப்பு | - 1/2 கோப்பை |
| கடலைப் பருப்பு | - 1/2 கோப்பை |
| கீரை | - 1/2 கட்டு |
| வெங்காயம் | - 1/4 கிலோ |
| பச்சை மிளகாய் | - 3 |
| பெருஞ்சீரகம் | - தேவையான அளவு |
| கறிவேப்பிலை | - தேவையான அளவு |
| உப்பு | - தேவையான அளவு |
| தேங்காய் எண்ணெய் | - 1/4 போத்தல் |

**செய்முறை**

உழுத்தம் பருப்பு, கடலைப்பருப்பு ஆகியவற்றை ஒரு மணித்தியாலம் ஊறவைக்கவும். பின் நீரை வடித்துத் துப்பரவாகக் கழுவிய பின், நன்றாக இறுக்கமாக அரைக்கவும் (நீர் சிறிதுகூட. சேர்க்கக் கூடாது). வெங்காயம், மிளகாயைத் துப்பரவு செய்து கழுவி, சிறு சிறு துண்டுகளாக வெட்டவும். அதைப்போன்று கீரையைத் துப்பரவு செய்து, சிறிது சிறிதாக வெட்டவும். வெங்காயம், கீரை என்பனவற்றை மாவுடன் சேர்த்து, அதற்குள் உப்பு, பெருஞ்சீரகம், கறிவேப்பிலை என்பவற்றையும் சேர்த்து, நன்றாகக் கலந்து பிசையவும். பின்னர், தாச்சியில் எண்ணெய் ஊற்றி நன்றாகக் கொதித்ததும் - மாவைச் சிறிது சிறிதாக எடுத்து, உள்ளங்கையில் வைத்து, மெல்லியதாகத் தட்டி, நடுவில் துளைபோட்டு, கொதிக்கும் எண்ணெய்குள் போட்டு, பொன்னிறமாக வந்ததும் எடுக்கவும். சூடாறியதும் பரிமாறலாம்.

இவ்வுணவானது சிற்றுண்டியாக மட்டுமல்ல, சத்துணவாகவும் காணப்படுகிறது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### சமாதானம் சாத்தியமா?

சமாதானம் குறித்த குரல்கள் சர்வதேச ரீதியில் சிறிலங்காவை நோக்கி ஓங்கி ஒலிக்கப்பட்டுவரும் இன்றைய நிலையில், தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் குறித்த விவகாரங்கள் மீதான அழுத்தங்களும், அச்சுறுத்தல்களும் படைத்தரப்பினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு இனத்தின் அடிப்படை அரசியல் உரிமைகளை நிராகரிப்பதோ அல்லது அவற்றை அவர்கள் அனுபவிப்பதை தடுக்க முயல்வதோ மிகமோசமானதும், நாகரிகமற்றதுமான மனித உரிமை மீறல் நடவடிக்கைகளேயாகும்.

இத்தகைய மனித உரிமை மீறல் செயற்பாடுகள் சிறிலங்கா அரசால் கடந்த நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

'சமாதானம்' பேசும் ஒவ்வொரு காலகட்டத்திலும் தமிழ்மக்களின் உரிமைகள் தொடர்பான விடயங்கள் முன்வைக்கப்படும் தருணங்களின்போதே, அரச தரப்பினரின் விசுவாசமின்மை, நேர்மையின்மை மற்றும் உறுதியற்ற தன்மை ஆகியன வெளிப்பட்டு அமைதி முயற்சிகளில் பின்னடைவும், தோல்விகளும் ஏற்பட்டமையை வரலாறு தெளிவாக உணர்த்தி நிற்கிறது.

கடந்த காலங்களில் சமாதானம் குறித்து பெரும் எடுப்பில் பிரசாரம்செய்துகொண்டு, வெண்புறாக்களைப் பறக்கவிட்டபடி, மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்புக்களை விதைத்தபடி அமைதித்தீர்வு சம்பந்தமாகப் பேசுவதற்கு பேச்சுவார்த்தை மேசைகளைச் சுற்றி அமர்ந்த அரச தரப்பினர்கள் எவரும் ஆத்மார்த்தமாக தமிழ்மக்களுக்கான அரசியல அடிப்படை உரிமைகளைத்தானும் வழங்கும் உறுதியான சிந்தனை கொண்டவர்களாகச் செயற்பட்டது கிடையாது.

போரின் ஊடாகச் தமிழ் மக்களை அழித்தது போதாதென்று, சமாதானத்தின் ஊடாகவும் அவர்களை வஞ்சித்து, ஏமாற்றும் போக்கிலேயே- சிங்கள அரசுகள் காலங்காலமாகச் செயற்பட்டு வந்துள்ளன. இந்த நயவஞ்சகப் போக்கே இன்றைய அவலங்களுக்கு எல்லாம் மூலகாரணமாகும்.

அரசினைச் சுயாதீனமாகச் செயற்பட ஜனாதிபதி விட்டதில்லை. ஜனாதிபதியிடமே அதிகாரம் குவிமையம் கொண்டிருப்பதனால், முப்படைத் தளபதியான அவரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கும் பாதுகாப்பு படையினர் அதிகாரவலுவற்ற பாதுகாப்பு அமைச்சுக்கோ, அரசாங்கத்திற்கோ பெருமளவு கட்டுப்பட்டுச் செயற்படுவதாகவும் இல்லை. புரிந்துணர்வு உடன்பாட்டின் கீழான விதிமுறைகளையும், அதை அனுசரித்து நடக்கவேண்டிய கடப்பாட்டினையும் படைத்தரப்பு மதிப்பதாக இல்லை.

புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு ஜனாதிபதியின் உடன்பாடில்லாமையே இதற்குக் காரணம்.

இன்றைய சமாதான நகர்வுக்கு இடையூறாக கடற்படையினரும், இராணுவத்தினரும் பல்வேறு செயற்பாடுகளை அரசின் உத்தரவின்றியோ அல்லது ஜனாதிபதியின் மறைமுக உத்தரவின்பேரிலோ மேற்கொள்வதற்கும் இந்த அரச - ஜனாதிபதி ஆட்சிகளுக்கிடையேயான புரிந்துணர்வற்ற முரண்பாடுகளே காரணமாகும்.

நாற்படையினரதும் கட்டுப்பாட்டை ரணில் தலைமையிலான அரசு தனது கட்டளை வலுவிற்குள் கொண்டுவரத் தவறிவிட்டது என்றே கூறலாம். இந்த நிலையே இன்றைய சமாதான நகர்வுகளின் முடக்கத்திற்கு மூலகாரணமாகும். இந்தச் சிக்கல் மேலும் அதிகரித்த வண்ணமேயுள்ளது.

தமிழ்மக்களின் அன்றாட வாழ்வியல் - அரசியல் உரிமைகளுள் அத்துமீறி தலையீடுசெய்வதன் மூலம் அரச படையினர் தமது அதிகார தோரணையை காட்டமுயலும் அதேவேளை, அரசால் அதைத் தடுத்து நிறுத்த முடியாமலும் உள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புடைய எந்தவொரு நிகழ்வையும், பாடசாலைகளில் நடத்தக்கூடாது என்று கட்டளையிடுவதும் - தமிழ்மக்கள் தமது விழாக்களிலும், நிகழ்வுகளிலும் புலிக்கொடியை ஏற்றக்கூடாது என்று அச்சுறுத்தல் விடுப்பதும், பொங்குதமிழ் நிகழ்வுகளில் அரச ஊழியர்கள் பங்கேற்கக்கூடாது என்று தடைவிதிக்க முயல்வதும், தமிழ்மக்களின் சுதந்திரமான அரசியல் ரீதியிலான செயற்பாட்டு உரிமைகளில் தலையீடு செய்து அவர்களை அவமதிப்பதாகவே கருதப்படும்.

அத்துடன், இது அரசின் சமாதான முன்னெடுப்புகளுக்கு முற்றிலும் மாறுபட்டதும், அதன்மீதான நம்பிக்கையை சிதைக்கும் நடவடிக்கையுமாகும். தமிழ்மக்களின் அரசியல் உரிமைகள் தொடர்பான விடயங்களில் படையினரின் தலையீடு என்பது அமைதிமுயற்சிகளுக்கு இடையூறை ஏற்படுத்தவே செய்யும் என்பதை- போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவும், சர்வதேச சமூகமும் புரிந்துகொள்வது அவசியம்.

உரிமைகளை நிராகரித்து, சுதந்திரமான அரசியல் செயற்பாடுகளுக்கு இடையூறு செய்துகொண்டு அச்சுறுத்தல்விடும் படையினரின் செயற்பாடுகள் தொடரும்வரை சமாதான நகர்வுகள் நம்பிக்கையுடன் முன்னெடுக்கப்படும் சாத்தியம் சாத்தியமற்றதாகவே இருக்கும்.

## நாடும் நடப்பும்




## தேசிய கூட்டமைப்பு தொடர்பான அறிக்கை இன்னும் இரண்டு வாரத்தில் வெளியாகும்!

அனைத்துக் கட்சிகளையும் இணைத்து, தேசியக் கூட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் நோக்கில் - ஜனாதிபதி தலைமையில் நேற்றுமுன்தினம் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

தேசியக் கூட்டமைப்பு அமைப்பது தொடர்பாக, அனைத்து கட்சிகளும் இணங்கதக்க முறையில் அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்காகவே, இந்தக் கூட்டம் கூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தொகுதி அமைப்பாளர்கள். இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

தேசியக் கூட்டமைப்பு அமைப்பது தொடர்பான அறிக்கை, இன்னமும் இரண்டு வாரத்தினுள் தயாரிக்கப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுப்பது பற்றி, இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

நடைமுறை அரசியல் நிலையில் - ஜே.வி.பியுடன் கூட்டமைப்பு அமைப்பது தொடர்பான, பேச்சுவார்த்தைகள் முறிந்த நிலையில், அவற்றுக்குரிய காரணங்களும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன.

ஜே.பி.யுடன் கூட்டமைப்பது தொடர்பாக, ஜனாதிபதி எடுத்த தீர்மானம் தறவானது என, சுட்டிக்காட்டப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்த நிலையில், ஐக்கிய தேசிக் கட்சியை தோற்கடிப்பது தொடர்பாக, தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் அமைய வேண்டும் என்றும், எதிர்காலத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சவாலாக அமைக்கப்பட இருக்கும் தேசியக்கூட்டமைப்பு இருக்கவேண்டும் எனவும், அதற்குரிய ஆலோசனைகளை பெறுவதும் இச்சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## சனத் கருணாரட்ண ஹவாய் செல்கிறார்!

(கொழும்பு)

இராணுவப் பேச்சாளராக இருந்த பிரிகேடியர் சனத் கருணாரட்ண, ஹவாயில் இடம்பெறவுள்ள இராணுவக் கற்கைநெறி ஒன்றில் பங்குபற்றுவதற்காக, நாளை புறப்படவுள்ளார்.

இதனால், தனது பொறுப்புக்களை இராணுவத் தலைமையகத்தில் வைத்து, புதிய இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ள கேணல் தமேதா பெரேராவிடம், நேற்றுக் காலை சனத் கருணாரட்ண கையளித்தார். கருணாரட்ண, கடந்த மூன்று ஆண்டுகளாக இராணுவப் பேச்சாளராகப் பதவி வகித்து வந்தார்.

புதிய இராணுவப் பேச்சாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் தமேத பெரேரா, கஜபா றெஜிமென்டில் தலைமைக் கட்டளை அதிகாரியாகக் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரச வைத்தியசாலைகளில் தற்காலிக ஊழியர் நியமனம்!

### சுகாதார அமைச்சு நடவடிக்கை

அரசாங்க வைத்தியசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றிய ஊழியர்கள் வேலைநிறுத்தம் செய்வதால், அவர்களின் இடத்திற்கு புதியவர்களை நியமிப்பதென, சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

வேலைநிறுத்தம் நடைபெற்ற 17 ஆம் திகதியன்று வேலைக்கு வராத தற்காலிக ஊழியர்கள், 18 ஆம் திகதி வேலைக்கு வந்தாலும், அவர்கள் கடமைபுரிவதற்கு அனுமதிப்பதில்லை என்றும், சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய ஆஸ்பத்திரி தொழிலாளர்களை சேவையில் இணைப்பதற்கான நடவடிக்கைகள், 17 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சம்பள விபரங்களை ஆராய்வதற்கு, தொழிற்சங்கங்களுக்கு ஆறு வாரகால அவகாசம் தேவையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வடக்கு-கிழக்கு பிரதேசங்களில் போலியோ தடுப்புமருந்து வழங்கல்!

போலியோ நோயை முற்றாக ஒழிக்கும் நோக்குடன், கடந்த எட்டு வருடங்களாக - மேலதிகமாக இரண்டு தடவை போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் தினங்கள் தேசிய அளவில் பிரகடனப்படுத்தப்பட்டன.

இந்த வருடம் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் நாளையும், அடுத்த மாதம் 18 ஆம் திகதியும் போலியோ சொட்டு மருந்து கொடுக்கும் தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

பத்து வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளும், இந்த இரு நாட்களிலும் சொட்டு மருந்து கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்குப் பகுதியில் வழமையான போலியோச் சொட்டு மருந்து கொடுக்கப்படவேண்டிய பிள்ளைகளில் போதிய அளவினர் மருந்து பெற்றுக்கொள்ளாமை, மக்கள் இடம்பெயர்வு சூழற்சுகாதார வசதிக் குறைபாடு, அண்டை நாடுகளிலிருந்து இந்த நோய் தொற்றக்கூடிய சாத்தியம் ஆகியவை காரணமாக -

இந்தச் சொட்டு மருந்தை முன்பு கொடுக்கப்பட்டோர், கொடுக்கப்படாதோர், என்ற வித்தியாசமின்றி சகல 10 வயதுக்குட்பட்ட பிள்ளைகளும் - இவ்விரு நாட்களிலும் தடுப்புமருந்து பெற்றுக்கொள்வதன் மூலம் போலியோ நோயை முற்றாக ஒழிக்கமுடியும்.

சகல சுகாதார வைத்திய பகுதிகளிலும், மக்கள் வசதிக்கு ஏற்ப சொட்டு மருந்து கொடுக்கும் நிலையங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

காலை 7 மணிமுதல் மாலை 4 மணிவரை இந்நிலையங்கள் செயற்படும். மேலதிக விபரங்களுக்கு அப்பகுதி சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார உத்தியோகத்தர்கள், தொண்டர்கள் உதவியை நாடுமாறு, சுகாதார சேவைகள் மாகாண பதில் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.தா. சிவபாதம் அறிவித்துள்ளார்.

## பட்டதாரி ஆசிரியர் 1850 பேருக்கு 3 மாதத்திற்குள் நிரந்தர நியமனம்!

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

அடுத்து வரும் மூன்று மாதகாலத்துக்குள், 1850 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக - கல்வி அமைச்சர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை - அரசாங்கம் பதவிக்கு வந்தது முதல் 40,000 பேர் ஆசிரிய சேவைக்கு விண்ணப்பித்திருப்பதாகவும், அவர்களில் 6000 பேர் தெரிவுசெய்யப்பட்டதாகவும் ,அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்காலத்தில் கல்வித் தகைமைகள் உள்ளவர்களன்றி, அரசியல் தகுதி அடிப்படையில் ஆசிரிய நியமன்ங்கள் வழங்கப்படமாட்டாது என அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் அடிப்படைத் தகைமைகள் கவனிக்கப்படாத நிலையில் - ஆசிரியர்களும், கல்வி அதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

கடுவெலையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# இந்த வார பலன்கள்

## 19.09.2003 ~26.09.2003 (திருக்கணிதம் ஜோதிடம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | சனி சந் |
| செவ் யுரோ | 21 கா 8-35கட.சந் 23 பக 3-25 சிங்.சந் 25 மா 6.42 கன்.சந் | | |
| நெப் | | | குரு புதன் |
| | | கேது | சூ சுக் |

### மேடம்

*(அச்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் சிறப்பும், முன்னேற்றமும், வருவாயும் கிட்டும். மனச்சந்தோஷமுடையவர்களாகக் காணப்படுவீர்கள். தேகசுகம், குடும்பசுகம் என்பன நன்றாக அமையும். எதிர்பார்த்த கருமங்கள் வெற்றிகரமாக நிறைவுபெறும். வெளிநாட்டுப் பிரயாணங்களால் கஷ்டம் உண்டாகும். திருமண வைபவங்கள் சிறப்பாக நடைபெறும். உத்தியோகத்தர்கள் திட்டமிட்டுச் கருமம் ஆற்றக்கூடியதாக இருக்கும். வியாபாரிகளுக்கு தொழில் சிறப்பாக நடைபெற்றுப் பணம் மேசையை நிறைக்கும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி அடைவார்கள்.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு தொழிற்துறை நன்றாக இருப்பினும், சில பிரச்சினைகள் தோன்றி மறையும். வருவாய் பாதிப்படையாது. சகோதரர்களால் உதவி கிட்டும். பிரயாணங்கள் கஷ்டங்களைக் கொடுக்கலாம். குடும்பத்தில் மனவேற்றுமைகளுக்கு இடமுண்டு. கொடுக்கல் வாங்கல்களில் அவதானமாக இருக்கவும். விவகாரத்தை எதிர்நோக்குவோருக்கு கருமம் தாமதமடையும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகரிப்பதுடன், இடமாற்றங்களும் தாமதப்படும். வியாபாரிகளுக்கு முயற்சி இருப்பினும் குறைந்த லாபத்தையே பெறுவர். மாணவர்களுக்கு சிரமம் அதிகமாக இருப்பினும், முன்னேற்றம் காண்பர்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*



இவ்விராசியில் ஜனன மானவர்களுக்கு செய்தொழில் நன்மையும், பணவரவும் சிறந்து விளங்கும். பிரயாணஞ்செய்வோர் தமது உடைமைகளைப் பற்றி அவதானமாக இருக்கவும். வீடு, வாகனம் முதலிய சிறப்புக்கள் உண்டு. குடும்பத்தில் நன்மையான செயற்பாடுகள் இருக்கும். வீட்டில் சுபகருமங்கள் நடக்கும். உறவினர்களின் வரவு அதிகமாகும். உத்தியோகத்தர்களுக்கு தொழில்களில் மாற்றங்கள் காட்டும். மங்கல கருமத்தை எதிர்பார்ப்போர் சந்தோஷமடைவார்கள். வியாபாரிகளுக்கு இலாபம் குறைவாகவே கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஊக்கமெடுத்தல் வேண்டும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியினருக்கு செய்தொழில் சிறப்படையும். வருமானம் சிறக்கும். இதற்கு முன்பிருந்த கஷ்டங்கள், கடன்கள் நீங்கும் பிள்ளைகளாலும், உறவினர்களாலும் நன்மையான பலன்கள் கிட்டும். தேகசுகம் சிறிது தாக்கப்படுமாயினும், உடனுக்குடன் நன்நிலை தோன்றும். மங்கல வாழ்க்கை முயற்சிகள் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்கள் தமக்குக் கொடுக்கப்பட்ட கருமத்தைச் சிறப்பாகச் செய்து நற்பெயர் எடுப்பர். வியாபாரிகளுக்கு வாரத்தின் முற்பகுதி மிகநன்று. முதலீடுகள் நல்ல விலைபோகும். மாணவர்கள் விளையாட்டில் அதிக கவனம் செலுத்துவர்.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முயற்சிகள் கஷ்டங்களைக் கொடுக்கும். செலவுகள் வருமானத்தை மீறிப்போகும். பணத்தட்டுப்பாடு நிலவும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும். தேகசுகமும் இடையிடையே பாதிப்படையும். வைத்தியச் செலவுகளும் அதிகமாகும். பிரயாணங்களில் அவதானமாக இருக்கவும். பொருள் நஷ்டங்கள் ஏற்பட இடமுண்டு. உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளுடன் மனஸ்தாபங்கள் தோன்றும். காதல் விடயங்களில் ஈடுபட்டோர் ஏமாற்றமடைவர். வியாபாரிகள் குறைந்த லாபத்தையே பெறுவர். வங்கி நிலையை சரிசெய்வதில் கஷ்டமடைவர். மாணவர்களுக்கு இடையிடையே சிறு சுகக் குறைகள் தோன்றி, கல்வியைப் பின்னடையச் செய்யும்.

### கன்னி

*(உத்தரம் 2, 3 4 ஆம் பாதங்கள, அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு தொழில் நிலை சுமுகமாக இருக்கும். மனச்சந்தோஷம் இருக்கும். பிள்ளைகளாலும், உறவினர்களாலும் உதவி கிடைக்கும். முந்திய கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகள் தீரும். தேகநிலை சுமுகமாக அமையும். தூரத்திலிருந்து உறவினர்கள் வருகைதருவார்கள். தேவையற்ற விடயங்களில் தலையிடுவதால் சிக்கல்களில் மாட்டிக் கொள்ள நேரும். புதிய சிந்தனைகள் நன்மை தரும். சுபகருமங்கள் இழுபறி நிலையிலேயே இருக்கும். உத்தியோகத்திலுள்ளவர்கள் முன்பிருந்த வேலைக் கஷ்டங்கள் நீங்கி சந்தோஷமடைவார்கள். வியாபாரிகளுக்கும் வியாபாரம் சிறப்பாக நடக்கும். மாணவர்களுக்கு ஏற்பட்டிருந்த தடைகள் நீங்கி, கல்வியில் முன்னேறுவர்.

### துலாம்

*(சித்திரை 3 , 4 ஆம் பாதங்கள, சுவாதி விசாகம் 1,2, 3 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் முறையில் செல்வாக்கும், வருவாயும் அதிகரிக்கும். குடும்பத்தில் சுபகருமங்கள் நடக்கும். உறவினர்களால் சில கஷ்டங்கள் தோன்றக்கூடும். தேகசுகம், குடும்பசுகம் நன்றாக இருக்கும். மகிழ்ச்சி நிலவும். தொடங்கும் கருமங்கள தடையின்றி அனுகூலமாகும். நண்பர்களால் உதவி உண்டு. உத்தியோகத்தர்கள் தாம் விரும்பியவாறு கருமங்களை முன்னெடுக்க முடியும். திருமணத்தை எதிர்நோக்கியிருப்போருக்கு கருமம் கைகூடி சந்தோஷத்தைக் கொடுக்கும். வியாபாரிகளுக்கு இருந்த முதலீடுகள் நல்ல விலைபோகும். மாணவர்கள் முன்னேற்றத்தையும், நன்மதிப்பையும் பெறுவர்.

### விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*



இவர்களுக்கு செய்தொழில்விருத்தியும், முன்னேற்றமும் உண்டு. பொருளாதார ரீதியாக இருந்து வந்த தடைகள் நீங்கும். தொடங்கும் கருமங்கள் நல்ல முடிவைத் தரும். குடும்பத்தில் சிலகருத்து வேற்றுமைகள் தோன்றும். அயலவர்கள் சில சந்தர்ப்பங்களில் தொல்லை கொடுப்பர். தூரதேசத்திலிருந்து நற்செய்திகள் வரும். நண்பர்களின் உதவி உண்டு. உத்தியோகத்தர்களுக்கு தொழில் ரீதியாக சில சிக்கல்கள் தோன்றும். எதையும் திட்டமிட்டுச் செய்வது நல்லது. மங்கல கருமங்கள் கைகூட வாய்ப்புக்கள் கிட்டும். வியாபாரிகள் குறைந்த லாபத்தையே பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர்.

### தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*



தனுசு இராசிக்காரருக்கு தொழில் முயற்சிகள் நன்றாக இருப்பினும்; இடையிடையே சில பிரச்சினைகள் தோன்றி மறையும், மனைவி வழி உறவினர்களின் உதவிகள் கிட்டும். தேகசுகம், குடும்பசுகம் பாதிப்படையாது. கொடுக்கல் வாங்கல்களிலிருந்த கஷ்டம் நீங்கும். மண வாழ்க்கையை எதிர்பார்ப்போருக்கு காலதாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வுகள், நன்மைகள் வந்து சேரும். புதிதாக உத்தியோகத்தை எதிர்பார்ப்போருக்கும் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு விற்பனை சிறந்து நற்பலனைத் தரும். தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் உண்டாகும். மாணவர்களுக்கு முன்பு இருந்து வந்த முட்டுக்கட்டைகள் நீங்கும்.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இவர்களுக்கு தொழில் நிலையில் கஷ்டங்கள் தோன்றும். முயற்சிக்கேற்றளவு லாபம் கிடையாது. கொடுக்கல், வாங்கல் கஷ்டம். கடன் தொல்லை போன்றன தலைதூக்கும். தேகசுகம் பாதிப்படைவதால், வைத்தியச் செலவு அதிகமாகும். குடும்பத்திலும் மன வேற்றுமை தோன்றும். தேவையில்லாத விடயங்கள் தலையிடுவதைத் தவிர்க்கவும் புதுமண வாழ்க்கைகள் கால தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்திலுள்ளவர்கள் சிலருக்கு இடமாற்றங்கள், தொழில் மாற்றங்கள் கிடைக்கலாம்., வியாபாரிகளுக்கு முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த குறைபாடுகள் நீங்கும்.

### கும்பம

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள, சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்)*



கும்பராசியில் ஜனனமானவர்களுக்கு, செய்தொழிலில் இடையூறுகள் காட்டும். பொருளாதாரமும் மந்தநிலையிலேயே இருக்கும். இனசன பந்துக்களிடையே கருத்து வேற்றுமைகள் தோன்றும். புதிய தொழில்களை நாடுவர். வீட்டில் சுபகருமங்கள் நடக்கும். இனத்தவர்கள் தூரதேசத்திலிருந்து வருகைதருவார்கள். காதல் விவகாரங்கள் ஏமாற்றத்தைத் தரும். உத்தியோகத்தர்களின் எதிர்காலத் திட்டங்கள் நன்மை தரும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் நல்ல விலைபோகும். தொழில் சம்பந்தமான பிரயாணங்கள் செய்வார்கள். மாணவர்களுக்கு உற்சாகமும், முன்னேற்றமும் உண்டாகும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தராட்டாதி, ரேவதி)*



இவர்களுக்கு தொழில் சம்பந்தமாக சிக்கல்களும், மனவேதனையும் உண்டாகும். பொருளாதாரக் கஷ்டம் தலைதூக்கும். கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை. கொடுத்த பொருள் மீண்டு திரும்பிவருவது கடினம். பிரயாணங்களில் பொருள் நஷ்டம் தோன்ற இடமுண்டு. உத்தியோகத்தர்கள் எதிலும் அவதானமாக நடந்து கொள்ளவும். மறைமுக எதிரிகளால் சிக்கல்கள் உண்டு. புதுவாழ்க்கையை எதிர்நோக்கு வோருக்கு தாமதமாகவே கருமம் கைகூடும். வியாபாரிகள் குறைந்த லாபத்தையே பெறு வர். மாணவர்களுக்கு சோம்பல் தன்மை அதிகமாக இருக்கும்.

---

# யாழ்.மாநகரசபை எல்லைக்குள் போலியோ தடுப்பு மருந்து வழங்கல்

இன்று காலை 7.00 மணிமுதல் பி.ப. 4.00 மணிவரையும், மாநகர சபை எல்லைக்குட்பட்ட பின்வரும் 22 இடங்களில், முதற்கட்டமாக போலியோ நோய் தடுப்புமருந்து வழங்கப்படவுள்ளது.

சுவாமியார் வீதி- சிகிச்சை நிலையம், ஈச்சமோட்டை சனசமூக நிலையம், திருநகர் சனசமூக நிலையம், குருநகர் சிகிச்சை நிலையம், ஆவே மரியாள் பாலர் பாடசாலை, யூபிலி மகப் பேற்று நிலையம், ஆயுர் வேதக் கல்லூரி, நாவலர் வீதி சிகிச்சை நிலையம், கொட்டடி பாலர் பாடசாலை, நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாலர் பாடசாலை, அரியாலை மகப்பேற்று நிலையம், இலங்கை செஞ்சிலுவை சங்கம், கண்டி வீதி, ஞானக் குழந்தை பாலர் பாடசாலை, சிவப்பிரகாசம் வீதி, அங்கர் பாமசி முன்

கந்தர்மடம் சிகிச்சை நிலையம், செட்டித்தெரு சனசமூக நிலையம், நல்லூரி சிகிச்சை நிலையம், மூத்த விநாயகர் சனசமூக நிலையம், வண்ணார்பண்ணை சிகிச்சை நிலையம், ஞானக்குழந்தை பாலர் பாடசாலை இராமநாதன் வீதி, நாவலர் பரிபாலன சபை, (நீராவியடி) ஆகிய இடங்களிலேயே போலியோ தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளதாக, யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

### சிறுவர் தினத்தை முன்னிட்டு போட்டிகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு, தமிழர் புனர்வாழ்வு கழக ஆதரவுடன், வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி நிலையம்- சிறுவர்களிடையே போட்டிகளை நடாத்தவுள்ளது. இப்போட்டிகள் - ஆடல், பாடல், உடற்பயிற்சி, அசைவும் இசையும் என்பனவாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டிகளில், முன்பள்ளிகளை சேர்ந்த மாணவர்கள் குழுவாக கலந்துகொள்ள முடியும் எனவும், ஒரு வலயத்திற்குட்பட்ட அனைத்து முன்பள்ளிகளும் - ஒரே மாதிரியான நிகழ்வுகளை ஒழுங்கு செய்யவேண்டும் எனவும், தெரிவிக்கப்படுகிறது

இப்போட்டிகள், எதிர்வரும் 1 ஆம் திகதிக்கு முன்பாக நடைபெறவுள்ளதாகவும், பங்குபெறவுள்ள முன்பள்ளிகள் விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பும்படியும், தமிழர் புனர்வாழ்வு கழகம் கேட்டுள்ளது.

# வலி.வடக்கில் மாடுகளுக்கு இன்று நோய்த் தடுப்பூசி

வலி.வடக்குப் பிரசேத்திலுள்ள மாடுகளுக்கு, தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ஏற்றும் நாட்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இன்று - அளவெட்டி தெற்கு பிரதேசத்தில் கிராமசேவகர் அலுவலகத்திலும், அங்குள்ள சனசமூக நிலையங்களிலும், 25 ஆம் திகதி வியாழக்கிழமை- தெல்லிப்பளை கிழக்கு, துர்ககாபுரம் ஆகிய இடங்களிலும், மாடுகளைக் கொண்டுவந்து, தடுப்பூசி ஏற்றிக்கொள்ளுமாறு கால்நடை வைத்தியர் அறிவித்துள்ளார்.

இத்தினங்களில் மாடுகளுக்கு தடுப்பூசி போடமுடியாதவர்கள், தெல்லிப்பழை கால்நடை வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றிக் கொள்ளமுடியும் என, அவர் தெரிவித்தார். அத்துடன், கோழிகளுக்கான கொள்ளை நோய் கம்போரோ போன்ற நோய்களுக்கு, ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும்- காலை 9-10 மணிக்கிடையில் கால்நடை வைத்திய பணிமனையில் தடுப்பூசி மருந்து வழங்கப்படுகிறது.

# மோசமான நிலையிலுள்ள 1 ஆம்கட்டை-தம்பசிட்டி வீதி!

(ஆழியவளை)

பருத்தித்துறை முதலாம் கட்டைச்சந்தியில் இருந்து தம்பசிட்டிக்குச் செல்லும் வீதி, மிகவும் பழுதடைந்த நிலையில் குன்றும் குழியுமாக காணப்படுவதால், இவ்வீதியினூடாகப் போக்குவரத்துச் செய்யும் மக்கள், பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, முதலாம் ஆம் கட்டைச்சந்தியில் இருந்து வட.இந்து மகளிர் கல்லூரி வரையான வீதியே போக்குவரத்துச் செய்யமுடியாத அளவு சேதமடைந்து காணப்படுகின்றது. பாடசாலை மாணவர்கள் பழுதடைந்த இவ்வீதியினால், விபத்தில் சிக்கவேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன. தனியார் கல்விநிலையங்களும் இப்பகுதியில் அமைந்துள்ளன.

இதன்காரணமாக - பெற்றோர்கள மிகவும் கவலை அடைந்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாடசாலை மாணவர்களின் நலன்கருதியாவது, இவ்வீதியைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (122)



தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்ற மயில்வாகனசாமி குருபூசை தினநிகழ்வில் - ஆறு.திருமுகன் சொற்பொழிவாற்றுவதையும், நிகழ்விற்கு தலைமை வகித்த நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# வாகனத் தொடரணி மீது கண்ணிவெடித் தாக்கு; மூன்று அமெரிக்க படையினர் கொல்லப்பட்டனர்!

## காயடைந்தவர்களை மீட்க வந்தவர்கள் மீதும் ரொக்கற் தாக்குதல்



(பக்தாத்)

பக்தாத்தின் மேற்குப் பகுதியான கல்டியா என்ற இடத்தில் அமெரிக்கப் படையினரின் வாகனத் தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் - 3 அமெரிக்கப் படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின்போது, காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்ட அமெரிக்கப்படையினர் மீதும் - ரொக்கற் மற்றும் கிரனேட் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை - ஈராக்கின் பலுஜா என்ற நகரில் - திருமண வைபவம் ஒன்றில் கூடியிருந்த மக்கள் மீது அமெரிக்கப்படையினர் சுடடதில்- 14 வயதுச் சிறுவன் ஒருவன் கொல்லப்பட்டான். நான்கு பேர் காயமடைந்தனர்.

திருமண வைபவத்திற்கு வந்திருந்த ஒருவர் ஆகாயத்தை நோக்கி சுட்டதைத் தொடர்ந்து, அருகில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த அமெரிக்கப் படையினர் - தம்மீதுதான் கூட்டமாக நின்று தாக்குதல் மேற்கொள்கிறார்கள் என நினைத்து, அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாலேயே மேற்படி அனர்த்தம் நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தை அடுத்து, பலுஜா நகரில் பதற்றம் அதிகரித்ததுடன், அங்கு அமெரிக்கப்படையினருக்கு எதிராக ஆர்ப்பாட்டமும் மேற்கொள்ளப்பட்டது.

## ரெனிஸ் நாட்டில் பாடசாலைக்குள் புகுந்து

# மாணவர்களைக் கொல்ல முயன்றவர் பொலிஸாரால் சுட்டு கொல்லப்பட்டார்

ரெனிஸில் உள்ள பாடசாலை ஒன்றினுள் நுழைந்த துப்பாக்கி நபரொருவர், அங்குள்ள மாணவர்களைக் கொலைசெய்வதற்கு மேற்கொண்ட முயற்சி பொலிஸாரினால் தடுக்கப்பட்டதுடன், அவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

கில்பற்றிக் என்ற நபர் பாடசாலை ஒன்றினுள் நுழைந்து, அங்குள்ள மாணவர்கள் 12 பேரைப் பணயக் கைதிகளாகப் பிடித்து வைத்திருந்திருந்தார். ஆனாலும், தன்கோரிக்கைகள் தொடர்பாக, பொலிஸாரிடமோ அல்லது தன் சகோதரியிடமோ எதுவும் தெரிவிக்க முன்வரவில்லை. பின்னர் நீண்ட நேரத்திற்குப் பின்னர் தன் கோரிக்கைகளைத் தெரிவிப்பதாகக்கூறி வெளியே வந்தவர், திடீரென சுட ஆரம்பித்துவிட்டார். இதனைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் மேற்படி நபர் கொல்லப்பட்டார்.

மேற்படி நபர், பாடசாலை மாணவர்கள் சிலரை கொலைசெயது விட்டு, தானும் தற்கொலை செய்யப்போவதாக, தனது குறிப்புப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தார் என, விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகப் பொலிஸார் கூறினர்.



ஈராக்கில் - மசகு எண்ணெய்க்குழாயின் வெடிப்பால் ஏற்பட்ட தீயின் வெப்பத்தைத் தாங்கமுடியாது, தனது முகத்தைக் கழுவும் ஒருவரைப் படத்தில் காணலாம்.

# அல்கெய்டா சந்தேகநபர்கள் ஸ்பானிய பொலிஸாரால் கைது!

ஸ்பானியப் பொலிஸார் வியாழககிழமை அல்கெய்டா இயக்கத்துடன் தொடர்புள்ளவர் எனச் சந்தேகிக்கப்பட்ட பலரைக் கைது செய்துள்ளனர். இவர்ளில் சிலர் அராபியத் தொலைக்காட்சியான 'அல் ஜசீரா' செய்தியாளர்களுடன் தொடர்புடையவர்கள் என அறிவிக்கப்பட்டிருந்தனர்.

இவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னர், பின்லேடனுடன் அல் ஜசீரா செய்தியாளர் ரசீர் சுலோனி உட்பட 33 மோதல்களில் ஈடுபட்ட தீவிரவாத குழுவைச் சேர்ந்தவர்கள் என நீதிபதி தீர்ப்பளித்திருந்தார்.

கைதுசெய்யப்பட்ட சிலர் அராபிய தொலைக்காட்சிச் செய்தியாளர் அலோனியுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டனர். அலோனி செப்ரெம்பர் 11 அமெரிக்கத் தாக்குதலின் பின்னர் பின்லேடனை நேரடியாகப் பேட்டி கண்டவர் எனவும், அந்த இயக்கத்திற்கு செய்திகளை பரிமாறிக்கொள்வதிலும், பணம் சேகரிப்பதிலும் ஈடுபட்டவர் எனக்கூறப்பட்டவர்.

அலோனி ஸ்பெயின் தெண்பகுதி யான இரனடாவில்,இம்மாதம் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கினியா ஜனாதிபதி பதவி விலகினார்!

அண்மையில் ஆபிரிக்க நாடான கினியா பீசோவில் நடைபெற்ற சதிப்புரட்சியில் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்ட கும்பாயாலா தான் பதவியில் இருந்து விலகிக்கொள்வதாக மேற்கு ஆபிரிக்க வெளிநாட்டமைச்சர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒற்றமைக்காகவும், பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்காகவும் தான் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்துள்ளதாக வானொலிக்கு அளித்த செவ்வியில் தெரிவித்தார்.

பதவியில் இருந்து விலக்கப்பட்ட காலத்தில் இருந்து, வீட்டுக்காவலில் 'கும்பாயாலா'வைக்கப்பட்டிருந்தார். சென்ற ஆண்டு பாராளுமன்றத்தைக் கலைத்த பின்,தொடர்ந்து தேர்தல் ஒன்றை நடத்துவதை பிற்போட்டு வந்தமை, இவர் பதவியிலிருந்து விலக்கப்பட்டமைக்கான காரணம் என தற்காலிகமாக பதவி ஏற்றுள்ள இராணுவ ஜெனரல் 'வெர்சிமோ கொரியர்' தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

வெகுவிரைவில் ஜனநாயகரீதியிலான அரசு ஒன்றை உருவாக்குவதற்கான, ஒழுங்குகளை தான் செய்துவருவதாகவும் வெரிசிமோ கொரியோ தெரிவித்தார்.

# செப்ரெம்பர் தாக்குதலுக்கும் சதாமுக்கும் தொடர்பில்லை



## அமெரிக்க அதிபர் புஷ் அறிவிப்பு

(வாஷிங்ரன்)

அமெரிக்காவில் நடந்த செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கும், ஈராக்கிய முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கும் தொடர்பு இல்லை. இவ்வாறு ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்தார்.

இந்தத் தாக்கதலுடன் சதாமிற்குத் தொடர்புண்டென, அமெரிக்க மக்கள் அண்மையில் நடந்த வாக்கெடுப்பு ஒன்றில் தெரிவித்திருந்தனர்.

ஆனாலும், அல் - கெய்டா அமைப்பினருடன் சதாமிற்குத் தொடர்பு இருந்த போதிலும் - செப்டெம்பர் 11 தாக்குதலுக்கும் சதாமுக்கும் தொடர்பு உண்டென அமெரிக்க மக்களில் எழுபது வீதமானோர் தெரிவித்த கருத்துக்கள் தவறானவை எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஈராக்கின்மீது போர் தொடுப்பதற்கு தவறான காரணங்களையே அமெரிக்க நிர்வாகம் வெளியிட்டது என்ற எண்ணம் அமெரிக்க மக்கள் மத்தியில் ஏற்பட்டு வருவதால் - நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்களில் பாதிப்பு ஏற்படலாம், என்பதாலேயே சில விடயங்களைத் தெளிவுபடுத்தவேண்டிய நிலை, புஷ்ஷிற்கு ஏற்பட்டுள்ளதென பத்திரிகை விமர்சகர்கள் தெரிவித்தனர்.

## உலக நோக்கு

# ஆப்கானில் நடந்த விமான தாக்குதலில் பதினொரு தலிபான் போராளிகள் பலி!

## அமெரிக்கா தெரிவிப்பு

(வாஷிங்ரன்)

ஆப்கானிஸ்தானின் கண்டகார் மற்றும் சாபுல் மாகாணங்களில் கடந்த 3 நாட்களாக மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலில் 11 தலிபான் போராளிகள் கொல்லப்பட்டதாக, அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அத்துடன், ஒருதொகுதி தலிபான் போராளிகள் சுற்றிவளைக்கப்பட்டுள்ளதாகவும், அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட 'ஒப்பரேஷன் மவுண்டின் வைபர்' என்ற தலிபான் போராளிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளில், இதுவரை 100 இற்கு மேற்பட்ட தலிபான் போராளிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், தற்போது அங்கு தலிபான் போராளிகளின் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளதால், அங்குள்ள அமெரிக்கா தலைமையிலான படைகள் கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்சியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.




யாழ்ப்பாணத்தின் சிறந்த கல்விமான்களில் ஒருவராகவும், காந்தியவாதியாகவும் நாடு அந்நியராட்சியிலிருந்து விடுதலைபெற வேண்டுமென்று முதலில் குரல் கொடுத்தவர்களில் ஒருவராகவுமிருந்த ஒரு பெரியார் இன்று இல்லை.

இப்பெரியாரின் ஆளுமை, அறிவு அவரின் சேவை, அவரின் பண்பு ஆகியவைகளை எடுத்துக்கூறும் ஒரு சிறு பிரசுரத்தை அவருடன் நெருங்கி உறவாடிய மற்றொரு கல்விமானாகிய ஓரன்பர் வெளிநாட்டிலிருந்து வெளியிட்டிருக்கிறார்.

அந்தப் பெரியாரின் சேவைக்கு இது ஒரு காணிக்கையாக இருக்கிறது.

அந்தப் பெரியாரின் சிறிய உருவப்படம் இப்பிரசுரத்தின் முகப்பு அட்டையில் இடம் பெற்றிருக்கிறது.

நேற்று நண்பகல் இப்பிரசுரத்தை எனது நண்பன் ஸ்ரீரங்கநாதன் எனக்குக் கொடுத்தான். அதைக்கையில் வைத்தபடியே நான் - எழுத்தாளரும், கவிஞரும், ஓய்வுபெற்ற பாடசாலை அதிபருமாகிய எனது மற்றொரு நண்பரைச் சந்திக்கச் சென்றிருந்தேன்.

என்னைக் கண்டதும், மதிய ஓய்வைத் துறந்து என்னிடம் வந்த அவர், எனது கையிலிருந்த அந்தப் பிரசுரத்தையும் வாங்கிப் புரட்டினார்.

இவரைப்போன்ற கல்விமான்கள், காந்தியவாதிகள் நல்லது என்று நினைத்துச் செய்த காரியங்களால்தான் நாங்கள் இன்று இந்த நிலையிலிருக்கிறோம் என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்றேன்.

இவர் காந்தியவாதியாகி மற்றும் பலரும் காந்தியைப் பின்பற்றி இந்தியாவின் விடுதலைக்காக ஆதரவு தெரிவித்தார்கள். காந்தியை, நேருவை இலங்கைக்கு அழைத்து இந்திய விடுதலைப் போராட்டத்துக்கு நிதி திரட்டிக் கொடுத்தார்கள். இந்தியாவை தாய் நாடு என்றும், இலங்கையைச் சேய்நாடு என்றும் மக்களுக்கு எடுத்துக்கூறி தாய் நாட்டுப்பற்றை வளர்த்தார்கள். இந்தியா விடுதலை பெற்றால் நாங்களும் விடுதலை பெற்றுவிட்டது மாதிரி எங்களுக்கு உணர்வை ஏற்படுத்தினார்கள். காந்தித்தாத்தாவை எங்கள் தாத்தாவாகவும், நேருமாமாவை எங்கள் மாமாவாகவும் நினைத்து உறவு கொண்டாடினோம்.

இப்பொழுது என்ன நடக்கிறது. நாங்கள் எங்கள் உரிமைகளுக்குக் குரல் கொடுக்க முடியாமல், எங்கள் சொந்த மண்ணிலேயே சுதந்திரமாக நடமாட முடியாமலிருக்கிறோம்.

இங்கு ஏற்பட்ட அவலம் தாங்க முடியாமல் தாய் நாடு என்று, இந்தியாவில் தஞ்சம் புகுந்தவர்கள் பட்டதுன்பம் என்ன? படும்பாடு என்ன?

காந்தியை வரவேற்று, இவர்கள் ஜே போட்டு நிதி திரட்டிக்கொடுத்ததற்குப் பதிலாக, அன்றே நாங்கள் ஜின்னாவுக்கு போட்டு ஆதரவு தெரிவித்திருந்தால், இன்று நாங்கள் எங்கள் சொந்த மண்ணில் மற்றையவர்களைப்போல் சகல உரிமைகளுடன், சுதரந்திரமாக வாழ்ந்து கொண்டிருப்போமே!

இவ்வாறு அந்த அன்பர் ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

அவர் சொன்னதில் என்ன தவறு. எமது தலைவர்கள் நாடாளுமன்றத்தில் சமபலப் பிரதிநிதித்துவம் கேட்டு வாதாடியபோது எமது தாயகத்துக்கு சுயாட்சி கேட்டிருந்தால், இன்று எங்களுக்கு இந்த அவல நிலை ஏற்பட்டிருக்குமா?

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## நாற்சந்தி

நோர்வேத் தலைநகர் ஒஸ்லோவில் மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்ட ஈழத்தமிழர் ஒருவர் - தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட அனைவரையும் தோற்கடித்து உறுப்பினராகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இது இன்றைய் பிரதான செய்தி.

பாலசிங்கம் பாஸ்கரன் என்பவரே இந்த ஈழத்தமிழர்.

நோர்வேயில் நடந்த தேர்தலில் போட்டியிட்ட இவருக்கு எதிராக ஸ்ரீலங்காவின் சிங்கள, ஆங்கில ஊடகங்கள் கடுமையான பிரசாரங்களை மேற்கொண்டபோதிலும் அது எடுபடவில்லை.

இந்த வெற்றியை நோர்வே ஏற்றுக்கொண்டுவிட்டது. அது அவர்களின் ஜனநாயகப் பண்பு.

நோர்வேயில் தமிழன் வென்றாலும், சிறிலங்காவில் அது தமக்குப் பெரும் தோல்வியாக நினைக்கும் சிங்களப் பேரினவாதிகள் இருக்கவே செய்கின்றனர்.

ஏற்கனவே நோர்வையைச் சமாதான முயற்சிகளிலிருந்து வெளியேறுமாறு கோஷமிடுபவர்களுக்கு இது பொறுக்குமா?

நோர்வேயைப் புலிகள் ஆக்கிரமிக்க குறிவைத்துள்ளார்கள். அதன் முதல் படி இந்தத் தேர்தல் வெற்றி என, கதிர்காமத்தார் அலறினாலும் அலறலாம்.

"எனினும் என்ன... பொறுத்தார் பூமியாள்வார். புறுபுறுத்தார் சாமியாவார்..." என்கிறார் சாத்திரியார் சண்முகத்தார்.



-தெருவாசி

## இரகசியம் பேணவேண்டிய...

கள் கனரக ஆயுதங்கள் மூலம் தம்மைப் பலப்படுத்தி வந்தனர்.

நாட்டின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளாது கட்சிகளின் கருத்துக்களுக்கு முன்னுரிமையும், தேசிய பாதுகாப்பு சம்பந்தமான கருத்துக்களை எடுத்துக்கொள்ளாமையுமே இந்த பின்னடைவுகளுக்கு காரணமாகும்.

எமது நாட்டைக் காப்பதற்கு புறப்பட்ட ஆயிரக் கணக்கான வீரர்கள் கொல்லப்பட்டபோது, அவர்களின் உடல்களை ஏற்க மறுத்துள்ளீர்கள். இதனால் விடுதலைப் புலிகள் அந்த உடல்களை எரித்துவிடவேண்டியதாயிற்று.

நட்பு நாடுகளுடன் நெருக்கமான உறவுகளை நாம் மேற்கொணடு வருகிறோம். எமக்கு உதவி தேவைபடும்போது, அவர்கள் உதவி செய்யத் தயாராகவே உள்ளனர். எமது கடல் கண்காணிப்பைத் தீவிரப்படுத்துவதற்கு எமக்குக் கப்பல் ஒன்றைத் தந்தது இதற்கொரு நல்ல உதாரணம்.

2001 ஆம் ஆண்டு இருந்ததை விட தற்போது எமது படைகள் மிகவும் பலமாக உள்ளன. இதற்கு இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிடமிருந்து உதவிகளைப் பெற்றுள்ளோம்.

நான் திருகோணமலை பாதுகாப்புத் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொண்டுள்ளேன். இந்த சமாதானப் பேச்சின் வெற்றிக்கு தேசிய பாதுகாப்பையும் அரசியல் சமரச முயற்சிகளையும் ஒருங்கே செயற்படுத்த வேண்டும். உங்களை சந்திக்கும் நேரங்களில் இவற்றைத் தெரியப்படுத்தியுள்ளேன்.

ஆனால், துரதிஸ்டவசமாக அரசியலுடன் பாதுகாப்பை இணைத்து குழப்பத்தை உண்டாக்கி உள்ளீர்கள். குறிப்பாக இந்த நாட்டை பாதுகாக்கும் இளம் வயதினரின் உயிர்களுடன் விளையாடுகிறீர்கள் என - பிரதமர் அனுப்பிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விடுதலைப்...

இயல்பு வாழ்க்கை குறித்தும் நேற்றைய சந்திப்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் தொல்காப்பியன், இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோரும் கலந்துகொண்டார்கள்.


## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
## இன்றறக் கழகம் & லியோ கழகம்
இணைந்து நடாத்தும்
## இலவச கண்சிகிச்சை முகாம்

காலம் : 20.09.2003, 21.09.2003. (சனி, ஞாயிறு)
காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 3.00 மணிவரை
இடம் : தம்பர் மண்டபம்

பிரதம விருந்தினர்
Lion.K.துரைராசா
(மாவட்ட தலைவர் லியோ)

சிறப்பு விருந்தினர்கள்
Lion.R.இராஜகுலேந்திரன்
(தலைவர், நல்லூர் லயன்ஸ் கழகம்)
திரு.க.இராசதுரை
(அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)

அனுசரணை வழங்குபவர்கள்
திருமதி: பிரியா கருணாரட்ண
(கண் பரிசோதகர்)

கொழும்பு
ஹமி சரண நிறுவனம்
GAMI SARANA ORGANIZATION

விசேடமாக மாணவர்களுக்கும், அலுவலக ஊழியர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் நவீனமுறையில் கண்நோய்களுக்கான சகல வைத்திய பரிசோதனைகளும் இலவசமாகச் செய்யப்படும்.

ரூ.3500க்கு மேல் பெறுமதியான பலரக கண்ணாடிகள் யாவும் ரூ.750க்கு வழங்கப்படும்.

ஏற்கனவே பரிசீத்து கண்ணாடிக்காக விண்ணப்பித்தவர்களுக்குரிய கண்ணாடிகளும் வழங்கப்படும்.

அனைவரையும் பங்குபற்றிப் பலனடையுமாறு அழைக்கிறோம்.

இன்றறக் கழகம் & லியோ கழகம்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

சி/1564


# தியாகி திலீபனின் நினைவு ஊர்தி சுதுமலையிலிருந்து புறப்பட்டது!

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 16 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வாக நேற்று, திலீபனின் வித்துடல் பல்கலைக்கழக மாணவர்களிடம் கையளிக்கப்பட்ட இடமான சுதுமலை புவனேஸ்வரி அம்மன் ஆலய முன்றலில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை - வலி. தென்மேற்கு அரசியல் பொறுப்பாளர் பவநீதனும், வலிகாமம் வட்ட தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சாம்பசிவமும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து தேசியக் கொடியின்னை வலிகாமம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்மறவனும், ஈகக் சுடரினை. கிராமசேவையாளர்களான சிவகுமார் மற்றும் நவரெட்ணராஜாவும், மாவீரர் ஈழவேந்தனின் தயாரான த.நேசமலரும் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து மலர் மாலை அணிவித்தலும், மலரஞ்சலி நிகழ்வும் இடம்பெற்றது. நினைவுரைகளை சாம்பசிவம் மற்றும் சிவகுமார் ஆகியோர் நிகழ்த்தினர்.சிறப்புரையினை தமிழ்மறவன் நிகழ்த்தினார்.

தொடர்ந்து, அலங்கரிக்கப்பட்ட ஊர்தி - மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவிகளின் பான்ட் வாத்திய இசையுடன் ஆரம்பமானது. இந்தப் பவனியில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர். பவனியின் இறுதி நிகழ்வு - இன்று மாலை சங்கானையில் இடம்பெறும்.

### தொலைக்கல்வி கருத்தரங்கு நாளை நடைபெறமாட்டாது

யாழ். செயலகத்தில் நாளை நடைபெறவிருந்த பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கான தொலைக் கல்விக் கருத்தரங்கு நடைபெறாதென, மேலதிக அரசாங்க அதிபர் பத்தினியம்மா திலகநாயகம்போல் அறிவித்துள்ளார்.

## புலிக்கொடி ஏற்றும்...

பனுக்குமிடையே சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் புலிகள் தமது கொடியினை ஏற்றக்கூடாதென கண்காணிப புக்குழுவினரால் தெரிவிக்கப்பட்டது. இதனை ஆட்சேபித்த குயிலின்பன் இது எமது தாயகப் பகுதி. எமது தாயகப்பகுதிக்குள் நாம் எமது தேசியக் கொடியினை ஏற்றுவோம். புரிந்துணர்வு உடன்படிக்கையில் எமது தேசியக் கொடியினை ஏற்றக் கூடாதென ஒன்றும் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவித்தார்.

இது சம்பந்தமாக தமது தலைமைப்பீடத்துடன் கதைத்தபின், முடிவை அறிவிப்பதாக கண்காணிப்புக் குழு பிரதிநிதிக்கு தெரிவித்தார்.(07)

## வவுனியா...

யாடல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

தனியார் கல்வி நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பொங்குதமிழ் தொடர்பான சந்திப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். இச்சந்திப்பில் வவுனியாவில் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள பொங்குதமிழ் நிகழ்வில் - மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் அனைத்து மக்களும் கலந்து கொளவதற்கு மிகவும் ஆவலாக எதிர்பார்த்திருக்கிறார்கள் என்று சர்வ தேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் செ.கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தி...

கேட்டு அறிந்துகொண்டதுடன்,

மேற்படி பணிகளை மேற் கொள்வதில் எதிர்நோக்கும் பிரச்சனைகள் எவையெனக் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

இந்தச் சந்திப்பில் நோர்வேக் குழுவினரிடம் தற்போதைய சமாதான முயற்சிகள் சீரான நிலையில் முன்னெடுக்கப்படாமையால் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடிய மர்வு நடவடிக்கைகள் மற்றும் அதனோடு இணைந்த பிறசெயற்பாடுகளில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகள் தொடர்பாக நோர்வே குழுவினரிடம் எடுத்துக்கூறப்பட்டது.

## இரு போக்கு...

வித்தனர்.ஆயுதம் தாங்கிய 25 இற்கு மேற்பட்டோர் கும்புறுப்பிட்டி பாடசாலைக்கு அருகில் வைத்து, பொலீஸார் சென்ற மோட்டார் சைக்கிளை வழிமறித்து அவர்களை கடததிச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கடத்தல் தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினருக்கு பொலிஸார் தரப்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## சந்திரிகாவின்...

சந்திப்பு நடத்துவதற்கு குறிக்கப்பட்ட நேரத்தின் பின்னர், கொழும்பில் நடைபெற்ற அஷ்ரப்பின் முத்திரை வெளியீட்டு நிகழ்வில் ஜனாதிபதி கலந்து'கொண்டார்.

தற்போதைய சமாதான மற்றும் அரசியல் நிலைமை தொடர்பாக - பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இதேவேளை - தொடர்ந்து, விடுதலைப் புலிகளுடன் கிளிநொச்சியில் சந்திப்பை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பிய நோர்வேயின் சமாதானத் தூதுக்குழுவினரை ஜனாதிபதி சந்திப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்து.

எனினும் இறுதிநேரத்தில் இவருடனான சந்திப்பு, ஜனாதிபதியின் சுகவீனம் காரணமாக இடைநிறுத்தப்பட்டதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்திருந்தது. இந்தச் சந்திப்புக்கு ஒதுக்கப்பட்ட நேரத்திற்குப் பின்னர் ஜனாதிபதி, அஷ்ரப்பின் இரண்டாவது ஆண்டுநிறைவு தினத்தில் கலந்துகொண்டார் எனவும் தெரியவருகிறது.

இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் - பின்லாந்து அரசை, நடுநிலையாளராக நியமிப்பதற்கு ஜனாதிபதி அண்மைக்காலமாக முயற்சித்து வருகின்றவேளையில், ஜனாதிபதியின் இந்த நடவடிக்கை அரசியல் அவதானிகள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது.

(01)

## தாய்லாந்தின் கண்ணிவெடி...

அகற்றும் பிரிவின் பிராந்திய செயற்பாட்டு அலுவலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தாய்லாந்து கண்ணிவெடி அகற்றும் பிரிவினருக்கு சிறப்புப் பயிற்சிகளை வழங்கியிருந்தனர். அதற்கு நன்றி தெரிவிக்கும் முகமாக மேற்படி நிபுணர்களுக்கு தங்க விருதும் சிறப்புச் சான்றிதழும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்சசியுடனும் நிகழ்வில் கலந்துகொண்ட தாய்லாந்து கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டு நிலையத்தினர் கருத்துத் தெரிவிக்கையில், தம்மால் பயிற்சியளிக்கப்பெற்ற மனிதநேய கண்ணிவெடி அகற்றும் தொண்டர்கள் சிறப்பாகப் பயிற்சிகளை மேற்கொண்டதாகவும் இது தமக்குப் பூரண திருப்தி தருவதாகவும் தெரிவித்தனர்.

நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜி தாய்லாந்து கண்ணிவெடி செயற்பாட்டு நிலையத்திலிருந்து வருகைதந்த குழுவின் தலைவருக்கு தங்கவிருது வழங்கிக் கௌரவித்ததுடன், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் பணிப்பாளர் திருமாறன் தாய்லாந்து கண்ணிவெடி செயற்பாட்டு நிலையத்தைச் சேர்ந்த நிபுணர்களுக்கு சான்றிதழ் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். உயர் பாதுகாப்பு...

மாரப்பன தலைமையில் ஆரம்பமான இந்த மாநாடு இரண்டு மணிநேரம் நீடித்தது.

இந்த மாநாட்டில் - யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், அமைச்சர் மகேஸ்வரன், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோ இராணுவத் தளபதி லயனல் பலகல்ல, யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா மற்றும் கடற்படை, விமானப்படை உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பில் - தென்மராட்சி பிரதேசத்திலுள்ள மறவன்புலோ, தனங்கிளப்பு மற்றும் அதனை அண்டியுள்ள கிராமங்களில் மக்கள் மீளக்குடியமர அனுமதித்தல் மற்றும் குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை போன்ற பிரதேசங்களின் கரையோரப் பகுதிகளில் மக்களைக் மீளக்குடியமர்த்தி அவர்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதல், வடமராட்சி கிழக்கில் இராணுவ உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்குகின்ற பிரதேசங்களில் மக்களை மீளக்குடியமர்த்துதல், வலி. வடக்கில் மக்களை மீளக் குடியமர்த்துதல் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், காரைநகர் சுற்றுவீதியைப் பொதுமக்களின் பாவனைக்கு திறந்துவிடுதல், குறிகட்டுவான் இறங்குதுறையில் இராணுவக் கெடுபிடிகள் இன்றி பயணம்செய்ய அனுமதித்தல் போன்ற விடயங்களும் முன்வைக்கப்பட்டன.

தற்போது நிரந்தர சமாதானம் ஏற்படவில்லை. எனவே மேற்படி பிரதேசங்களின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படவேண்டும். ஆகையால் இப்பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதிக்கமுடியாது என, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

எனினும், பாதுகாப்பு அமைச்சர் சில இணக்கப்பாடுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சித்தபோதும், சரத் பொன்சேகா தனது நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என் உறுதியாகத் தெரிவித்ததையடுத்து, முடிவுகள் எதுவும் எட்டப்படாது மாநாடு முடிவடைந்தது.

இதேவேளை, உயர்பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்துதல் மற்றும் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்துதல் என்பவற்றை வலியுறுத்தி எதிர்வ்ரும் 23 ஆம் திகதி 'பாராளுமன்றில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்தார். (01,202)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம் செல்லத்தம்பி

(அச்சுவேலி வடக்கு)

அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது வேப்பங்குளம், வவுனியாவில் வசித்தவருமாகிய திருமதி அன்னம் செல்லத்தம்பி அவர்கள் 15.09.2003 திங்கட்கிழமை காலை இந்தியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகர் - குஞ்சரம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கா.செல்லத்தம்பி அவர்களின் அன்பு மனைவியும், அழகையாவின் சகோதரியும், விஷ்ணுகுமார், தபேந்திரகுமார் (பிரான்ஸ்), கிருஷ்ணகுமார் (பிரான்ஸ்), சதீஸ்குமார் (வவுனியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயமாலினி, நளினி, கவிதா, மேரிசில்வியா ஆகியோரின் அன்பு மாமியாரும், கோகுலவருண், வர்ணிகா, கோகுல்ராஜ், ஹம்சாயினி, தனுசாயினி, பிந்துஜன், சுபத்திரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் 15.09.2003 தமிழ்நாடு இந்தியாவில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தற்காலிக முகவரி:*
**செ.சதீஸ்குமார்**
**7 ஆம் ஒழுங்கை,**
**வேப்பங்குளம், வவுனியா.**

*தகவல்:*
**திருமதி மேரிசில்வியா சதீஸ்குமார் (மருமகள்)**
**திரு. செ.செல்வக்குமார் (சகோதரன்)**

(488)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.09.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.